ஈஸ்டர் சிறப்பிதழ் இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
# PAATHUKAVALAN

1876 - 2026 150 ஆண்டுகள்


Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 04 | திகதி : 05.04.2026 | விலை : 100.00


## உடனடியாகப் போர்நிறுத்தப்பட்டு அமைதிப் பேச்சுவார்த்தை மலரவேண்டும்

### உயிர்ப்பு விழாச் செய்தியில் திருத்தந்தை



மத்திய கிழக்கு நாடுகளில் நீடித்து வரும் பயஙகரமான போரை முடிவுக்குக் கொண்டு வர, சம்பந்தப்பட்ட நாடுகள் உடனடியாகப் போர்நிறுத்தத்தை அறிவித்து, பேச்சுவார்த்தைகளைத் தொடஙகவேண்டும் என்று திருத்தந்தை உருக் கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"வன்முறை ஒருபோதும் நீதியையோ, நிலையான அமைதியையோ தந்துவிடாது கடந்த இரண்டு வாரஙகளாக மத்திய கிழக்கு நாட்டு மக்கள் போரின் கொடூரமான வன்முறையால் சொல்லொணாத் துயரங்கள் அனுபவித்து ➔ 2

## யாழ். ஆயரின் ஈஸ்டர் செய்தி




கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே,

உயிர்த்த இயேசுவின் அன்பும் அருளும் சமாதானமும் உங்களுடன் இருப்பதாக! மரணத்தை வென்ற உயிர்ப்பும், இருளை வென்ற ஒளியின் விழாவுமே இயேசுவின் உயிர்ப்பு விழாவாகும். கடந்த நாற்பது நாட்களாக நாம் மேற்கொண்ட செப, தவ முயற்சிகளும், தியானித்த பாஸ்கா நிகழ்வுகளாகிய இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பனவும் பங்குகளில் பங்கேற்ற இறைதியானஙகளும் எம்மை ஆன்மீகரீதியாகப் பக்குவப்படுத்தி, இயேசுவின் உயிர்ப்பை அர்த்தமுள்ள முறையில் கொண்டாட உதவியுள்ளன.

இந்த நேரத்தில் உலகின் தற்போதைய நிலைமையையும், அதனால் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் நாம் நினைத்துப் பார்க்கும்போது, எம் உள்ளத்தில் ஒருபுறம் கவலையையும், இன்னொரு புறம் நம்பிக்கையின்மையையும் உருவாக்கியுள்ளதை உணருகின்றோம்.மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் போர்களும் மோதல்களும் உலகமே ➔ 2

வல்லரசுகளின் வல்லாதிக்கத்தில்
உலகமே உருக்குலைகிறது
பசுமைப் புல்வெளிகள்
பழிவாங்கும் புயல்களாகின்றன
முரண்பாடுகள் என்னும்
முகமூடிக்குள்
மூச்சுத் திணறுகிறது பூமிப்பந்து
உலகப் பொருளாதாரத்தின்
உயிர்நாடியான ஹார்முஸ் ஜலசந்தி
வழிமறிக்கப்பட்டதால்
விழிபிதுங்கி நிற்கிறது மனுக்குலம்
"உண்மையா" அன்று கேட்ட பிலாத்துபோல
"சமாதானமா" இன்று கேட்கின்றனர் நவீன பிலாத்துகள்
பல்வகைப் போதைகளால்
பூமியின் சுவாசப்பைக்குள்
புகைமூட்டங்கள் புழுங்கிக் கிடக்கிறது
இயேசுவுடன் இன்று
மனுக்குலமும் சுமக்கிறது சிலுவைகள்
உதவவும் துடைக்கவும்
சீமோன்களும் வெரோணிக்கம்மாள்களும்
வருவதாகத் தெரியவில்லை
இடப்பக்கக் கள்வனுடன்
இயற்கை மரணமடையாது
வலப்பக்கக் கள்வனிடம்
வாக்குமூலம் கேட்டாவது
உண்மைக் கிறிஸ்தவராய் உயிர்த்து
செயற்கை சுவாசமளிப்போம்
மூச்சடங்கும் பூமிக்கு...


ஆசிரியர் இ. வசிகரன்



## இயேசு உயிர்த்தார் !
## அல்லேலூயா !
## அல்லேலூயா !
## அல்லேலூயா !

காவலன் வாசக நெஞ்சங்களுக்கு
## ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள் 2026



# யாழ் ஆயரின் உயிர்ப்பு விழாச் செய்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அசைந்து போகும் அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதன் விளைவுகள் நம் தாய் நாட்டிலும் உணரப்படுகின்றன. பொருளாதார சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மக்கள் வாழ்வில் ஒரு உறுதியின்மை நிலைமையே நிலவி வருகின்றது. குறிப்பாக நம் வடக்குப் பகுதிகளில் வேலை நேரக் குறைவு, எரிபொருள் தட்டுப்பாட்டினால் பயணக் கட்டுப்பாடுகள், மாணவர்களின் கல்வி வாழ்க்கை, மின்சாரம் போன்ற அத்தி யாவசிய சேவைகள் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் எம்மவர் குடும்பங்களில் சிரமத்தையும் மனஅழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான சவால்கள் மத்தியில் இயேசுவின் உயிர்ப்பு விழாச் செய்தி எமக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கின்றது. மனத்துயரங்களை ஏற்றுச் சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, மறுபடியும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நமக்கு நிலையான நம்பிக்கையாக இருக்கின்றார். அவருடைய உயிர்த்தெழுதல் நமக்கு ஒரு உறுதியை அளிக்கின்றது. துன்பமும் மரணமும் கிறிஸ்தவர்களாகிய எமக்குக் கடைசிச் சொல்லாக இருக்க முடியாது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம் கஷ்டங்களில் நம்மோடு நடக்கின்றார். நம் சோதனைகளில் நம்மை வலுப்படுத்துகின்றார். புதிய வாழ்க்கையின் நம்பிக்கையால் நம் இதயங்களை நிரப்புகின்றார்.

அன்பான சகோதர சகோதரிகளே, நாம் போர்க்கால வேதனைகளையும் போருக்குப் பின்னைய வாழ்க்கையின் சவால்களையும் அனுபவித்த மக்கள். ஆனால் நாம் எதையும் தாங்கி வாழும் மக்கள் மட்டுமல்ல. நம்பிக்கையின் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டவர்கள்.

நாம் இன்று உரைக்கும் "அல்லேலூயா" என்பது ஒரு சாதாரண மகிழ்ச்சிச் சொல் அல்ல, நம்பிக்கை இன்னும் உயிரோடு இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் அறிவிப்பாகும்.

ஆகவே, உயிர்த்தெழுந்த ஆண்டவரில் நம் விசுவாசத்தை மேலும் ஆழப்படுத்தி, அவர் எப்போதும் நம்மோடு இருப்பார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நாம் வாழ முயல்வோமாக. அதேநேரத்தில், உலகம் முழுவதும் துன்புறும் மக்களுக்காகவும், குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வாழும் நம் சகோதரர் சகோத ரிகளுக்காகவும் நாம் மனமார மன்றாடுவோமாக. சமாதானத்தின் அரசனாகிய உயிர்த்தெழுந்த கிறிஸ்து, உலக நாடுகளின் தலைவர்களை ஒப்புரவுக்கும் நிலையான சமாதானத்திற்கும் வழிநடத்துவாராக.

யாழ்ப்பாண மறைமாவட்டம் இவ்வருடம் "சமூகத் தொடர்பாடல்" ஆண்டாகக் கடைப்பிடித்து வரும் இக்காலத்தில் இயேசுவின் உயிர்ப்பு விழா நமக்கு ஒரு முக்கியமான அழைப்பை விடுக்கின்றது. நாம் பயன்படுத்தும் தொடர்பாடல் சாதனங்கள் வழியாக உண்மை, நம்பிக்கை மற்றும் இறையன்பின் செய்திகளைப் பரப்பும் நற்செய்தியின் சாட்சிகளாக நாம் மாறுவோமாக. பயமும் தவறான தகவல்களும் நிரம்பியுள்ள இவ்வுலகில், கிறிஸ்துவின் ஒளியும் சமாதானமும் வெளிப்படும் கருவிகளாக நாம் இருப்போமாக.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மகிழ்ச்சியும், சமாதானமும் உங்கள் இதயங்களை நிரப்பட்டும். உங்கள் அனைவருக்கும் அல்லேலூயா நல் வாழ்த்துக்கள்

## உயிர்ப்புவிழாச் செய்தியில் திருத்தந்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்," என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே, ஈரானில் உள்ள பள்ளி மற்றும் குடியிருப்புகள் மீதான தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டதையும், லெபனானில் மருத்துவப் பணியாளர்கள் பலியானதையும் சுட்டிக்காட்டிய அவர், "லெபனான் மக்கள் எதிர்கொண்டுள்ள கடுமையான நெருக்கடிகளுக்குத் தீர்வு காணத் தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகள் அவசியம்" என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், சவுதி அரேபியா, குவைத், துபாய் உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் பதற்றம் அதிகரித்துள்ளது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும், இலட்சக்கணக்கானோர் வீழுந்தும் தவிக்கும் இச்சூழலில், "மத்திய கிழக்கு நாட்டுக் கிறித்தவர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள நன் மனம் கொண்ட மக்களின் பெயரால் நான் வேண்டுகிறேன்: போரை நிறுத்துங்கள்! அமைதிப் பாதைகளைத் திறவுங்கள்!" எனத் திருத்தந்தை தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி - 2026

### நமக்காக அந்தக் கல்லை யார் புரட்டுவார்?

உலக மனித சக்திகளில் எல்லமை உடையோர் தமது சொந்த நலன்களைக் காக்கும் பொருட்டு நடந்து கொண்டிருக்கும் ஓர் கொடூர போரின் மத்தியிலே உலகம் வன்முறையாலும் பயத்தாலும் காயப்பட்டுள்ள தருணத்தில் இவ்வாண்டுக்கான உயிர்த்த ஞாயிறு செய்தியானது வெளி வருகின்றது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் யுத்தத்தினால் தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து தவிக்கும் பல குடும்பங்களில் இருந்து எழுப்பும் அவலக் குரலும் அவர்களின் அழுகயும் கூக்குரலும் மட்டுமல்லாது படுகாயங்களுக்கு உள்ளாகிக் கட்டுக்களோடு அழுது புலம்பும் மக்கள் எழுப்பும் அகுரல்களும் எம் நெஞ்சில் பாரத்தை உண்டு பண்ணுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் துன்ப துயரத்திலும், வேதனையிலும் நாமும் பங்கு கொள்வதுடன் அவர்களுக்காக செபிக்கின்றோம். அதிகரித்து வரும் போர் நிலை மையின் விளைவுகளால் உலகில் அமைதி என்பது எட்டாக் கனியாகி விடுமோ என்ற அச்சமும் ஆதங்கமும் எழுந்துள்ளது. இருப்பினும் இருளின் ஆட்சி இறுதி அல்ல என்பதை இயேசுவின் உயிர்ப்புச் செய்தி நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

பெரும் போர்ச் சத்தங்கள் மேலெழுந்து வந்தாலும் வெறுமையான கல்லறை அமைதியான ஆனால் சக்திவாந்த உண்மையை எடுத்தியம்புகிறது. கல்லறையில் இருந்து புதிய வாழ்வு உருவாகியது. கல்லறை வாயிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்? (மாற்கு 16:3) இதுவே இயேசுவின் உடலுக்கு நறுமண தைலம் பூசச் சென்ற பெண்களின் கேள்வியாக இருந்தது. ஆனால் அவர்கள் அங்கு வந்தபோது கல்லறை வாயிலிருந்து அந்த மிகப்பெரிய கல் புரட்டப்படிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள் (லூக்கா 24:2). ஆண்டவரே அந்தக் கல்லை புரட்டி இருக்கிறார். இந்த உண்மையே இன்று எமக்கு எதிர்பார்ப்பை தரும் செய்தி ஆகும்.

நாம் தவக்காலத்திலே பல தியாகங்களை மேற்கொண்டதன் பின்னர் புனித வாரத்தின் வழிபாட்டில் விசேடமாக அதன் உச்சமான புனித சனி வழிபாட்டில் புதிய நெருப்பு, பாஸ்கா புகழ் உரை, புதிய கத்தோலிக்கரை விசுவாசத்தில் இணைத்தல் ஆகிய வழிபாடுகளினால் எழுச்சி பெற்றோம்.

இந்த வழிபாடுகள் எல்லாம் நம்பிக்கையாளருக்கு மகிழ்ச்சியினதும் எதிர்பார்ப்பினதும் காரணமாகிறது எப்போதென்றால் உயிர்த்த கிறிஸ்துவைத் தனிப்பட்ட ரீதியில் கண்டு கொண்டதன் பிற்பாடு "அவர் நம்மோடு பேசிக் கொண்டு வருகையில் நம் உள் ளங்கள் பற்றி எரியவில்லையா" (லூக்கா 24:32) என்று சொன்னால் மட்டுமே.

பயங்கரமும் வன்முறையும் என்ற கல்லை, எண்ணற்ற மனித உயிர்களைக் காவு கொண்டும் ஆறாத காயங்களோடும் உறவு இழந்து ஊனமாக்கப் பட்டும் ஆறாத வடுக்களோடும் மாறாத நோய்களோடும் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டத்தை உருவாக்கி வரும் இனவாதம் மதவாதம் என்ற கல்லை, முறையான சமத்துவமின்மையால் ஏற்படும் அநீதி, அதிகார துஷ்பிரியோகம் அல்ல நீதியற்ற செயல்கள் என்ற கல்லை, எதிர்கால சந்ததியினரின் கனவை குழி தோண்டிப் புதைக்கும் சில அரசினால் முன்னெடுக்கப் படும் அடிமைத்தனம் ஒழுக்கக்கேடு என்ற கல்லை யார் எமக்காக புரட்டிப் போடுவார் என்ற கேள்விகளுடன் உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவருக்கும் விடை ஒன்றுதான் ஆண்டவரால் தான் இந்த கற்களைப் புரட்டிப் போடமுடியும். பெரிய வெள்ளிக்கிழமை உலகம் துன்பத்தையும், அநீதியையும், மரணத்தையும், கவலையையும் கண்டது. ஆனால் உயிர்த்த ஞாயிறு காலையில் கடவுள் மரணத்தை விட வாழ்வும், வெறுப்பை விட அன்பும், விரக்தியை விட எதிர்பார்ப்பும் வலிமை வாய்ந்தது என்பதை வெளிப்படுத்தினார்.

ஆண்டவர் உலக அமைதியை அச்சுறுத்தும் நம்பமுடியாத, நினைத்துப்பார்க்க முடியாத, புரட்ட முடியாத தடைகள் ஆகிய கல்லை புரட்டிப்போடுவார் என்ற உறுதியோடு அவருடைய உயிர்ப்பானது இந்த இருள் சூழ்ந்த காலத்திலும் எமது நம்பிக் கையை புதுப்பிப்பதோடு எமது எதிர்பார்ப்பு வலுப்படுத் தப்படுத்தப்படுதாக. இந்த உயிர்ப்பு காலத்திலே "காயீனின் கரம்" ஆன ஆட்சியானது "உண்மையான மனமாற்றத்தின் இதயத்தால்" முறியடிக்கப்பட வேண்டுமென்று தொடர்ச்சியாக ஜெபிப்போம்.

## யூத மதக் கொள்கை...

(3ம் பக்கத் தொடர்ச்சி...)

இஸ்ரேல் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு குடியேற்றப் பட்டுள்ளனர். 1984 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் இக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய சட்டத்தின் கீழ் 35,000 எத்தியோப்பிய மக்கள், இஸ்ரேலில் குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

அக்கால எத்தியோப்பிய மக்கள், யூதர்கள் எனக் கூறப்பட்டாலும் இந்த மக்கள் ஆரம்பம் முதல் கிறிஸ்தவர்களாக இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் இஸ்ரேல் அரசு, எத்தியோப்பிய மக்களை யூதர்களாக மாற்றுவதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் யூத வம்சாவழிகள் என்று கூறிக்கொள்ளும் 9,000 எத்தியோப்பிய மக்களை இஸ்ரேலில் குடியமர்த்தும் திட்டம் உண்டு. ஒவ்வொரு மாதத்திலும் 100 எத்தியோப்பிய மக்கள் இஸ்ரேலில் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பலஸ்தீன நிலங்களில் யூதக் குடியேற்றங்களை விரிவுபடுத்தி வரும் நிலையிலேயே இஸ்ரேல் அரசு, வெளிநாடுகளில் இருந்தும் தமது நாட்டில் யூதர்களை குடியமர்த்தி வருகிறது.

இஸ்ரேலின் சர்ச்சைக்குரிய மீண்டும் திரும்புவதற்கான சட்டத்தின் கீழ் உலகெங்கிலும் உள்ள எந்த ஒரு யூதருக்கும் இஸ்ரேலில் குடியேற அனுமதி இருப்பதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே தற்போதைய புவிசார் அரசியல் பொருளாதார போட்டிச் சூழலில் அமெரிக்க அரசு 39 ரில்லியன் கடன் சுமையில் இருக்கும் நிலை மற்றும் ட்ரம்பின் தன்னிச்சையான அரசியல் போக்குகளைத் தமக்குச் சாதகமாக்கி, இஸ்ரேல், உலகில் யூதர்களின் ஆதிக்கத்தையும் யூத மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

பொய்யான மெசியாவின் மீள் வருகையும் அதன் ஊடாக உண்மை என உறுதிப்படுத்துகிறது.

இத் திட்டம் பற்றித் தற்போது பெரும்பான்மையான அமெரிக்க மக்கள் நன்கு புரிந்து கொண்டாலும், ட்ரம்பின் ஆட்சியும், அமெரிக்க செனட் சபையில் யூத உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் அமெரிக்க கொள்கை மற்றும் தீர்மானம் எடுக்கும் உயர் இராஜதந்திரிகளினால் எதுவும் செய்ய முடியாத நிலை இருப்பதாக அக்சியோ என்ற செய்தித் தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே இயேசுவின் உயிர்த்த நாளில் உலக மக்கள். இஸ்ரேல் அரசின் தவறான கற்பிதங்களை புரிந்து கொள்ளத் தலைப்பட வேண்டும்.


விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நினைவு

பிறப்பு 16 . 10 . 1935

இறப்பு 22 . 03 . 2021



அமரர்

ஒலிவர் ராணி அரசநாயகம்

ஆருயிர்த்தாயே...
ஆண்டவர் சந்நிதி சென்று ஆண்டுகள் ஐந்து ஆனதோ?
ஐயம் இன்றி எண்ணுகின்றோம்
ஐக்கியமாய் இறைவனில் இன்புற்று இருப்பீர் என்று
இவ்வுலகில் இருக்கின்ற உம் உறவுகள்
இறையருள் பெற்று மனநிறைவாய் வாழ
இறைவனிடம் இரந்து வேண்டுங்கள்

மிருசுவில் உறவினர்கள்

AD-129

"இயேசு பிறப்பு" "இயேசு உயிர்ப்பு" என்ற உண்மைத் தத்துவத்தை, அன்று ஏற்க மறுத்த யூதர்கள், இன்றைய உலக அரசியல் – பொருளாதார குழப்பங்களின் சூத்திரதாரிகள்





# யூத மதக் கொள்கையும் ஈரான் மீதான போரும்

## இஸ்ரேலின் ”மீண்டும் திரும்புவதற்கான சட்டம்” ஆபத்தானது.

அ. நிக்ஸன்
அரசியல் ஆய்வாளர்

ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேல் போர், இரண்டு வகையானது. ஒன்று அமெரிக்க டொலர் எதிர் சீன யுவான், இரண்டாவது யேசுநாதரின் பிறப்பையும் உயிர்ப்பையும் நம்பாத யூதர்களின் மனநிலை. அதாவது யேசுநாதர் காலத்தில் ஆரம்பித்த யூதர்களின் ஆதிக்க மனநிலையும், உண்மையான மெசியா விரைவில் வருவார் என்ற அவர்களின் தவறான கற்பிதமும் 21 ஆம் நூற்றாண்டு வரையும் தொடருகின்றது.

இதுதான் இன்றைய உலக அரசியல்- பொருளாதாரக் குழப்பங்களின் பின்னணி. வெறுமனே ஈரானிடம் அணு ஆயுதம் இருக்கிறது. ஈரான், தனது மக்களின் சுதந்திரம், ஜனநாயகத்தை மதிப்பதில்லை, ஈரான் உள்ளக மோதல் உலக மனித உரிமைப் பிரச்சினை என்று உலகத்துக்குச் சித்தரித்துக் கொண்டு, இப் போர் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது.

ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேல் போர் என்று கூறினாலும், மேலும் இரண்டு பிரதான உள்ளடக்கங்கள் உண்டு.

ஒன்று மிகக் குறைந்த 15 மில்லியன் மக்களைக் கொண்ட யூதர்களின் பலம் தான். இன்று உலகத்தில் அரசியல் - பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன என்பதை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை இஸ்ரேல் அரசின் பிரதான இலக்கு.

இரண்டாவது, இஸ்ரேல் அரசின் இந்த மனநிலையைப் பயன்படுத்தியும், இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட்டின் உளவு ஆற்றலைப் பயன்படுத்தியும், தற்போது உலக சந்தையில் எண்ணெய் வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க முற்படுகிறது.

அத்துடன் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம். இவாஞ்சலிக்கல் கத்தோலிக்க (Evangelical Catholic) சமயப் பிரிவினரின் கைப்பிள்ளையாகவும் மாறியுள்ளார்.

ஆகவே இப்பின்னணிகளோடு தான் ஈரானுக்கு எதிரான போரை நோக்க வேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாகும். யூத மதத் தலைவர்கள் இயேசுவின் உடலைச் சீடர்கள் திருடிச் சென்றதாக அன்று தவறாகப் பிரசாரம் செய்தனர். ஆனால், இயேசு உயிர்த்தெழுந்ததைச் சீடர்கள் நேரில் கண்டதாகச் சாட்சியமளித்தனர், சீடர்களின் இக் கூற்று, ஆரம்பகாலத் திருஅவையின் வளர்ச்சிக்குப் பிரதான சான்றாக அன்று இருந்தது.

அன்று இயேசுவின் உயிர்ப்புப் பற்றிக் கூறிய அதே பொய்யைத் தான், இன்றும் யூதர்கள், வெவ்வேறு வடிவங்களில் கூறி - குறிப்பாக டொனால்ட் ட்ரம்பைத் திசைதிருப்பி, உலக ஆதிக்கத்தைத் தமது சமய நம்பிக்கைக்குள் கொண்டு வர முற்படுகின்றனர்.

விசேடமாக மெசியா மீண்டும் வரவுள்ளார் என்று கூறியே பலஸ்தீனத்தில் இஸ்ரேல் யூதக் குடியேற்றங்களை 1967 இலிருந்து மேற்கொண்டு வருகிறது.

1967 ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனிய நிலங்களான மேற்குக் கரை (West Bank), மற்றும் கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேல் அமைத்துள்ள யூதக் குடியிருப்புகள், சர்வதேச சட்டத்தின் பிரகாரம் சட்டவிரோதமானவை.

கோலன் குன்றுகள் (Golan Heights) பகுதியில் பெருமளவு யூதர்கள் குடியேற்றப் பட்டுள்ளனர். இது பற்றி சர்வதேச நீதிமன்றத்தில் 2024 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 700,000-இற்கும் அதிகமான யூதர்கள் இந்த ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வசிக்கின்றனர். இந்தக் குடியேற்றங்கள் பலஸ்தீனத்தின் நில உரிமையைப் பறிப்பதாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையின் படி, "இரு-நாடு" என்ற தீர்வு முறைக்குத் தடையாக இருப்பதாகவும் பரவலாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

2023-ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி, மேற்குக் கரையில் சுமார் 529,000 பேரும், கிழக்கு ஜெருசலேமில் 246,000 பேரும் குடியேறியுள்ளனர். சர்வதேச சமூகம் இவற்றை சட்டவிரோதமானதாகக் கருதுகிறது, ஆனால் இஸ்ரேல் அரசு இவற்றை அங்கீகரித்து, ஆதரிக்கிறது. விளைவுகள்: இந்தக் குடியேற்றங்களால் பலஸ்தீனியர்களின் நிலம், நீர் மற்றும் இயக்க சுதந்திரம் (movement) கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்றொரு நாடு வலிந்து உருவான பின்னர், 1967 இல் யூதக் குடியேற்றங்கள் மேலும் தீவிரமடைந்தது. ஆனாலும் காசாவில் இருந்த குடியேற்றங்கள் 2005 ஆம் ஆண்டு அகற்றப்பட்டன. ஆகவே, மெசியா மீண்டும் பிறந்து வருவார் என யூதர்கள் அன்றிலிருந்து இன்று வரையும் மேற்கொண்டு வரும் தவறான கற்பிதங்களை சட்டப்படி நியாயப்படுத்தும் அணுகுமுறை தான் இந்த ஈரான் மீதான போரின் பின்னணி. நன்கு தெரிந்து தான் இஸ்ரேல் இப் போரை நடத்துகிறது.

ஆனால் ட்ரம், இஸ்ரேல் அரசின் உள் நோக்கம் புரியாமல் அல்லது அமெரிக்க உலக ஆதிக்கம், சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலரின் ஆதிக்கம் வலுப்பெற வேண்டும் என்பதை மனதில் கொண்டு ஈரான் மீதான பேரைத் திணித்திருக்கிறார் போலும். ட்ரம்பின் இத் திணிப்புக்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது அமெரிக்கா மக்கள் தொகையில், யூதர்கள் 2% சதவீதமாக இருந்தாலும், அரசியல், நிதி, ஊடகம் மற்றும் கல்வியியல் துறைகளில் முக்கிய ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

சியோனிய பிரசாரங்கள் ஊடாக, அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில், குறிப்பாக இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டில் வலுவான செல்வாக்குச் செலுத்துகிறார்கள். பல முக்கிய தொழில் நிறுவனங்கள் மற்றும் கொள்கைப் பிரசாரக் குழுக்களிலும் யூதர்களின் பங்களிப்பு முக்கியமாக இருக்கிறது.

அமெரிக்க காங்கிரசில் யூதர்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக உள்ளது. பல முக்கிய கொள்கை முடிவுகளில் யூத ஆதரவுக் குழுக்களின் (Lobbies) பங்கு அதிகமாகும். அதேநேரம், வங்கித் துறை, முதலீடுகள், ஹாலிவுட் மற்றும் முக்கிய ஊடக நிறுவனங்களில் யூதர்கள் உயர் பதவிகளில் உள்ளனர், இது மக்கள் கருத்தை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்துகிறது.

அமெரிக்காவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அறிவுசார் சமூகங்களில் (Intellectual circles) யூதர்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்காவின் "இஸ்ரேல் ஆதரவு" (Pro-Israel) நிலைப்பாட்டைத் தக்க வைப்பதில் யூத அமெரிக்கர்களின் ஆதரவுக் குழுக்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

அதேநேரம், பலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாகவும் ஈரான் மீதான போருக்கு எதிராகவும் அமெரிக்காவில் வாழும் யூத மக்கள் பலர் குரல் கொடுப்பதாக அக்சியோ (axios) என்ற அமெரிக்க ஊடகம் கூறுகிறது.

யூதர்கள் அமெரிக்க அரசியலில் பெரும் ஆதிக்கம் செலுத்துவதாகச் சிலர் கருதினாலும், இது ஒரு கூட்டுச்சதி (Conspiracy Theory) என்றும், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை தேசிய நலன் சார்ந்தே முடிவெடுக்கப்பட்டு வருவதாகவும் வாதிடுவோர் உண்டு.

அதாவது யூத ஆதிக்கங்கள் மற்றும் மெசியா வருவார் என்ற தவறான கற்பிதங்களை அமெரிக்காவில் உள்ள மக்கள் பலர் எதிர்க்கின்றனர். இது ட்ரம்ப் 2024 ஆம் ஆண்டு மீண்டும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட செல்வாக்கு என்று வோசிங்டன் (washingtonpost) என்ற செய்தித் தளத்தில் வெளியான கட்டுரை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் கத்தோலிக்க சமயம் வலுவாக உள்ளது. ஆனால் அது ஆதிக்க சக்தியாக இல்லை. அமெரிக்க அரசியலில் நேரடி ஆதிக்கம் செலுத்துவதும் இல்லை.

அமெரிக்கர்களில் சுமார் 19-22% மக்கள் கொண்ட மிகப்பெரிய இரண்டாவது மதப் பிரிவாக கத்தோலிக்க சமயம் உள்ளது. 2024 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம், சுமார் 53 மில்லியன் கத்தோலிக்கர்கள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். இருந்தாலும், புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவம் (Protestant Christianism) அங்கு செல்வாக்குச் செலுத்துகிறது. ஆனால் இந்த புரட்டஸ்டன்ட் மதப் பிரிவினர் யூதர்களின் மத நம்பிக்கைக்கும் ஆதிக்கத்துக்கும் எதிரானவர்கள்.

அமெரிக்காவில் கத்தோலிக்கர்கள் கல்வி மற்றும் சமூக சேவைகளில் முக்கிய பங்காற்றுபவர்களாகவும் உள்ளனர். அமெரிக்காவின் இரண்டு பிரதான தேசிய அரசியல் கட்சிகளான, ஜனநாயகக்கட்சி. குடியரசுக்கட்சி ஆகியவற்றில் கத்தோலிக்க சமயத்தவர்கள் கூடுதலாகப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்.

அத்துடன் அமெரிக்க உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களில் கத்தோலிக்கர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும், அது மதசார்பற்ற அரசியலமைப்புக்கு உட்பட்டே இயங்குகிறது. கத்தோலிக்க சமயம் அமெரிக்க சமூகத்தில் கணிசமான கலாசார மற்றும் சமூக செல்வாக்கைக் கொண்டுள்ளது, ஆனால் அது அமெரிக்க தேசத்தின் கொள்கைகளில் முழுமையாக ஆதிக்கம் செலுத்தவில்லை.

இப்பின்னணியில், டொனால்ட் ட்ரம்ப் ஏன் யூதர்களின் பிடியில் சிக்கி, இன்றைய உலக அரசியலை குழப்புகிறார் என்று புரியவில்லை. இங்கே இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது யூதர்களின் மத நம்பிக்கையான ”மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்” கொள்கையுடன் பிண்ணிப் பிணைந்தது.

ஆனால் பாரம்பரிய யூத மதம் இயேசு உயிர்த்தெழுந்ததை ஏற்பதில்லை, மாறாக இயேசுவின் போதனைகளை யூத சட்டத்திற்கு முரணானது என்றே கருதியது. இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை என்பதன் அடித்தளமாகும். இந்த அடிப்படையைப் புரிந்துகொண்ட கிறிஸ்தவர்கள், அமெரிக்காவில் பெரும்பான்மையாக வாழும். பின்னணியில், உண்மையான மெசியா வருவார் எனப் பொய்ப் பிரசாரம் செய்யும் யூதர்களின் பின்னால் சென்று ட்ரம்ப் செயற்படுவது உலகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், உலக நாகரிகத்திற்கும் ஆபத்தானது.

ஏனெனில் உலக அரங்கில் தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்க யூதர்கள் பல வழிகளைக் கையாளுகின்றனர். குறிப்பாக இஸ்ரேல் அரசு 2024 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய"மீண்டும் திரும்புவதற்கான சட்டம்" யூதர்களின் மக்கள் தொகையை அதிகரிக்கும் நோக்கம் கொண்டவை.

இச் சட்டத்தின் கீழ் எத்தியோப்பிய நாட்டில் வாழும் மக்கள் சிலர்...

தொடர்ச்சி 2ம் பக்.

ஈஸ்டர் சிறப்பிதழ்

# நம்பிக்கை இழந்த உலகிற்கு புதிய விடியல் கிறிஸ்துவின் உயிர்ப்பே!

கிறிஸ்தவ விசுவாசத்தின் மையத்தில் ஒளிரும் மிகப் பெரிய உண்மை இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். சிலுவையில் துன்பத்தையும் அவமானத்தையும் அனுபவித்து மரித்த இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பது மனித வரலாற்றில் மிக ஆழமான நம்பிக்கையின் செய்தியாகும். இது ஒரு சாதாரண அதிசயம் மட்டுமல்ல கடவுளின் அன்பும் இரக்கமும் மனித குலத்தின் மீது வெற்றி பெற்ற தருணமாகும்.

விவிலியம் இந்த உண்மையை மிக வலிமையாக எடுத்துக்காட்டுகிறது. “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரிந்தியர் 15:14) என்ற புனித பவுலடிகளாரின் வார்த்தைகள் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளமென்பதைத் தெளிவாக காட்டுகிறது. இயேசுவின் உயிர்ப்பு இல்லாமல் கிறிஸ்தவ நம்பிக்கை முழுமையடையாது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே மனித வாழ்க்கைக்கு நித்திய நம்பிக்கையையும் வாழ்வின் அர்த்தத்தையும் வழங்குகிறார்.

மனித வாழ்க்கையில் மரணம் ஒரு பயங்கரமான உண்மையாக இருக்கிறது. ஆனால் இயேசுவின் உயிர்ப்பு மரணத்தின் மீது வாழ்வு வெற்றி பெற்றதை அறிவிக்கிறது. கல்லறைக்கு வந்த பெண்களிடம் தூதர் கூறிய வார்த்தைகள் நம்பிக்கையின் மிகப் பெரிய அறிவிப்பாகும். “அவர் இங்கே இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்” (லூக்கா 24:6) என்ற புனித லூக்காவின் வார்த்தைகள் மனிதர்களின் மனங்களில் ஒளியை ஏற்படுத்துகின்றன. மரணம் மனித வாழ்வின் இறுதி அல்ல கடவுளின் திட்டத்தில் புதிய வாழ்க்கை இருக்கிறது என்பதை உயிர்ப்பு நமக்கு உணர்த்துகிறது. அதனால் கிறிஸ்தவர்கள் மரணத்தை ஒரு முடிவாக அல்ல, கடவுளுடன் இணையும் ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாகப் பார்க்கின்றனர்.

இன்றைய உலகம் பல்வேறு சிக்கல்களால் நிரம்பியுள்ளது. ஏழ்மை, வேலைவாய்ப்பு இல்லாமை, குடும்பப் பிரச்சினைகள், போதைப் பழக்கம், வன்முறை, சமூக அநீதிகள் போன்றவை மனிதர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன. பல இளைஞர்கள் எதிர்காலம் குறித்துக் குழப்பத்துடன் வாழ்கின்றனர். சில குடும்பங்கள் பொருளாதார சிக்கல்களால் உடைந்து போகின்றன. ஒரு தந்தை வேலை இழந்ததால் தனது குடும்பத்தை எப்படி நடத்துவது என்று கவலைப்படுகிறார். ஒரு தாய் தனது குழந்தைகளின் கல்விக்காக போராடுகிறாள். சில இளைஞர்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி மனஅழுத்தத்தில் வாழ்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இயேசுவின் உயிர்ப்பு ஒரு ஆழமான நம்பிக்கையை அளிக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்து மனிதர்களின் துன்பங்களிலும் அவர்களுடன் இருப்பதாக நமக்கு உறுதி அளிக்கிறார். இருள் அதிகமாக இருந்தாலும் கடவுளின் ஒளி இறுதியில் வெற்றி பெறும் என்பதை உயிர்ப்பு நினைவூட்டுகிறது. அதனால் உயிர்ப்பு மனிதர்களுக்குப் புதிய தைரியத்தையும் மன உறுதியையும் அளிக்கிறது.


உயிர்த்தெழுந்த இயேசு தமது சீடர்களிடம் தோன்றி “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” (லூக்கா 24:36) என்று கூறினார். முன்பு பயந்து மறைந்திருந்த சீடர்கள், பின்னர் உலகம் முழுவதும் நற்செய்தியை அறிவித்த துணிச்சலான சாட்சிகளாக மாறினர். அதேபோல் இன்று கிறிஸ்தவர்கள் உயிர்ப்பின் சாட்சிகளாக சமூகத்தில் வாழ அழைக்கப் படுகிறார்கள். உயிர்ப்பின் உண்மை வார்த்தைகளில் மட்டுமல்ல. செயல்களிலும் வெளிப்பட வேண்டும். ஒரு ஏழைக் குடும்பத்திற்கு உதவிக்கரம் நீட்டும்போது, தனிமையில் வாழும் ஒருவருக்கு ஆறுதல் அளிக்கும்போது, குடும்பத்தில் மன்னிப்பை வளர்க்கும்போது உயிர்ப்பின் செய்தி நம் வாழ்க்கையில் வெளிப்படுகிறது. ஒரு ஆசிரியர் மாணவர்களை அன்புடன் வழிநடத்தும்போது, ஒரு மருத்துவர் அர்ப்பணிப்புடன் நோயாளிகளை சேவிக்கும்போது, ஒரு இளைஞன் நேர்மையுடன் வாழ முயலும்போது அங்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒளி தெரிகிறது.



அருட்தந்தை யா. ரமேஸ் அமதி

உயிர்ப்பு நமக்குப் புதிய வாழ்க்கைக்கான அழைப்பாக உள்ளது. பைபிளில் இயேசு கூறுகிறார்: “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11:25). இந்த வார்த்தை உயிர்ப்பு மனித வாழ்க்கைக்கு அளிக்கும் ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. உயிர்ப்பு நம்மை மனமாற்றத்திற்கும் தூய்மையான வாழ்க்கைக்கும் அழைக்கிறது. வெறுப்பு, பொறாமை, சுயநலம் போன்றவற்றை விட்டுவிட்டு அன்பு, இரக்கம், கருணை, அமைதி ஆகியவற்றை வளர்க்கும் வாழ்க்கையே உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையாகும். உயிர்ப்பு தனிப்பட்ட நம்பிக்கையை மட்டும் அல்ல சமூக மாற்றத்திற்கும் அழைக்கிறது. ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், அநீதியால் பாதிக்கப் பட்டவர்கள் ஆகியோருக்கு உதவுவது கிறிஸ்தவர்களின் பொறுப்பாகும். ஒரு சமுதாயத்தில் அன்பும் நீதியும் வளரும்போது அங்கு உயிர்ப்பின் சக்தி செயற்படுகிறது. ஒருவருக்கொருவர் உதவுவது, சமூகத்தில் அமைதியை உருவாக்குவது, மனிதநேயத்தை பாதுகாப்பது ஆகியவை உயிர்ப்பின் உண்மையான வெளிப்பாடுகள் ஆகும்.

எனவே இயேசுவின் உயிர்ப்பு கடந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்வு மட்டுமல்ல, அது இன்றும் மனிதர்களின் வாழ்க்கையை மாற்றும் உயிருள்ள நம்பிக்கையாக உள்ளது. துன்பதுயரங்களும் வாழ்வியல் சிக்கல்களும் நிறைந்த உலகில் உயிர்ப்பு ஒரு புதிய விடியலை அறிவிக்கிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் அன்பு, மன்னிப்பு, அமைதி மற்றும் சேவை ஆகியவற்றை வளர்த்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வேண்டும். அப்போதுதான் உயிர்ப்பின் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் மனித சமூகத்தில் உண்மையாக அனுபவிக்கப்படும். •



# அகிலத்தின் சத்தங்கள் போர் என முழங்க அகிலத்தின் வேந்தனாய் எழுந்தார்



இன்று நாம் கொண்டாடும் ஈஸ்டர் பெருவிழா கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமான மகிழ்ச்சியான திருநாளாகும். ஈஸ்டர் தினமென்பது இயேசுக் கிறிஸ்து சிலுவையில் மரித்த பின்னர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை நினைவு கூருவதாகும்.

இந்த உயிர்த்தெழுதல் வெறும் வரலாற்றுச் சம்பவம் மட்டுமல்லாமல், மாறாக கிறிஸ்தவர்களாகிய எம்முடைய வாழ்க்கைக்கு உயரிய அர்த்தம் தரும் நம்பிக்கையின் செய்தியாகக் காணப்படுகின்றது.

மேலும் இது வெறுமனே மதச்சார்புக் கொண்டாட்டம் மட்டுமல்ல, இருளின் ஆட்சியை முறியடித்து ஒளியின் ஆட்சியை உலகிற்குக் கொண்டு வந்ததாகும். அத்தோடு புதிய விடியலாகவும் திகழ்கின்றது. இவ்வாறு இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றித் திருவிவிலியம் பல சான்றுகள் பகர்கின்றன அவையாவன:

**மத்தேயு 28: 6 ‘அவர் இங்கே இல்லை, அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்’**

**யோவான் 11:25 ‘ இயேசு அவரிடம் உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்’**

**உரோமையர் 6:4 ‘இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக் கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்’**

**1பேதுரு 1: 3 ‘அவர் தம் பேரிரக்கத்தின்படி இறந்த இயேசுக் கிறிஸ்துவை உயிர்த்தெழச்செய்து நமதுக்குப் புதுப்பிறப்பு அளித்துள்ளார்’**

இன்றைய உலகத்தை நாம் பார்த்தால், பல சவால்களும் கவலைகளும், துன்பங்களும் என பலதரப்பட்ட பிரச்சினைகள் நிறைந்திருக்கின்றன. மனிதர்களிடையே ஒற்றுமையின்மை, போட்டி, பொறாமை, மனஅழுத்தம், போர், வறுமை எனப் பலதரப்பட்ட சூழ்ச்சிகளுக் கிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் விடுக்கும் செய்தி என்னவென்றால், இருள் இருந்தாலும் ஒளி பிறக்கிறது. மரணம் இருந்தாலும் வாழ்க்கை வெற்றி பெறுகிறது. அத்தோடு நமக்கு நம்பிக்கையைத் தருவதோடு வாழ்வின் புதிய தொடக்கமாகவும் மாற்றத்தின் அழைப்பாகவும் காணப்படுகின்றது.

எனவே, பிறக்கப்போகும் இயேசுவின் உயிர்த்தெழுதலில் இருந்து எவ்வாறு இயேசுக்கிறிஸ்து பிறரை மன்னித்து, அன்பு செய்து வாழ்ந்தாரோ அதேபோல் நாமும் வெறுமனே இதையொரு கொண்டாட்டமாக நினைவுகூராமல் இயேசுவின் உயிர்த் தெழுதல் போல நாமும் நம்பிக்கையுடன் எழுந்து நின்று நம் இதயத்திலும் சமூகத்திலும் புதிய வாழ்க்கையை உருவாக்குவோம்.

அனைத்துத் துயரங்களுக்குப் பின்னாலும் ஒரு வெற்றி உண்டு. எனவே பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற வரிக்கு ஏற்றால் போல் வெறுப்புணர்வை விடுத்து மன்னிப்பையும், பகைமையை வெறுத்து சமாதானத்தையம் கொணர்ந்து வாழ்வோம்.

அருட்சகோதரன் : அ.பிரவீன்ராஜ்

ஈஸ்டர் சிறப்பிதழ்



# போர் மேகங்களிடையே ஓர் உயிர்ப்பு

புகழ்பெற்ற ஓவியர் ஒருவர் "மரணத்தின் மௌனம்" என்ற தலைப்பில் ஒரு ஓவியத்தை வரைந்தார். அதில் ஒரு இருண்ட அறை, அதன் நடுவே ஒரு மெழுகுவர்த்தி அணைந்து கிடப்பது போலவும், ஒரு மனிதன் நம்பிக்கையற்றுத் தலையில் கைவைத்து அமர்ந்திருப்பது போலவும் சித்தரித்திருந்தார். அந்த ஓவியத்தைப் பார்த்த ஒரு சிறுவன், "ஐயா, அந்த மெழுகுவர்த்தியின் திரியில் இன்னும் ஒரு சிறிய சிவப்புப் புள்ளி இருக்கிறதே, அது எரியும் வாய்ப்பு இருக்கிறதா?" என்று கேட்டான். ஓவியர் புன்னகையுடன், "தம்பி, அந்த ஒரு புள்ளிதான் "நம்பிக்கை". அது இருக்கும் வரை இருளால் வாழ்வை முழுமையாக வெற்றி கொள்ள முடியாது" என்று சொன்னார். உலக வரைபடத்தைப் பார்க்கும்போது, அந்த ஓவியரைப் போலவே நாமும் கவலையில் ஆழ்ந்திருக்கிறோம். வன்முறை, போர், அதிகாரப் போட்டி என இருள் சூழ்ந்திருக்கிறது. ஆனால், இந்த இருளைக் கிழித்துக்கொண்டு வரும் ஒரு பேரொளிதான் இயேசுவின் உயிர்த்தெழுதல் பெருநாள்.

உயிர்த்தெழுதல் என்பது வெறும் ஒரு மதச் சடங்கல்ல. அது இயற்கையின் விதிகளையே மாற்றி அமைத்த ஒரு தெய்வீகப் புரட்சி. யூத அதிகார வர்க்கமும், அன்றைய உரோமைப் பேரரசும் இணைந்து ஒரு மாபெரும் கல்லால் அந்த நசரேயனின் கல்லறையை மூடி, அதற்கு அரசாங்க முத்திரையிட்டு, ஆயுதம் ஏந்திய வீரர்களைக் கொண்டு காவல் காத்தனர். "அன்பு தோற்றுவிட்டது, அதிகாரம் வென்றுவிட்டது" என்று உலகம் எண்ணிய வேளையில், மூன்றாம் நாள் அதிகாலையில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக்கா 24:5-6) என்ற அந்த இறைவார்த்தை, மரணத்தை ஒரு முற்றுப்புள்ளியாக அல்ல, ஒரு தொடர்ச்சியாக மாற்றியது. புனித பவுல் அடியார் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (1 கொரிந்தியர் 15:55) குறிப்பிடுவது போல, மரணத்தின் கூர் ஒடிக்கப்பட்டு, பாதாளத்தின் வெற்றி பறிக்கப்பட்டது. மரணம் என்பது வாழ்வின் முடிவு அல்ல, அது ஒரு புதிய விடியலின் தொடக்கம் என்பதை இயேசுவின் உயிர்த்தெழுதல் அகிலத்திற்கு நிரூபித்தது.

இன்றைய உலக அரசியல் சூழலை உற்றுநோக்கினால், நாம் இன்னும் அந்தப் பழைய "கல்லறை மனநிலையிலேயே" (Tomb Mentality) வாழ்ந்து கொண்டிருப்பது புலனாகிறது. குறிப்பாக, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவும் பதற்றமான சூழல், மனித குலத்தை மீண்டும் ஒரு இருண்ட காலத்திற்கு இட்டுச் செல்கிறது. அன்றைய உரோமைப் பேரரசைப் போலவே, இன்றைய வல்லரசு நாடுகளும் தங்கள் அதிகார பலத்தால் அமைதியைக் கொண்டுவர முடியும் என்று நம்புகின்றன. அணு ஆயுதப் போரின் அச்சுறுத்தல் என்பது மனித மனங்களை ஒரு இருண்ட கல்லறைக்குள் பூட்டி வைத்திருக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் போது, வன்முறைதான் தீர்வு என்ற தவறான முடிவை நோக்கி உலகம் தள்ளப்படுகிறது. மனிதன் இன்று நிலவை எட்டிப்பிடித்துவிட்டான், ஆனால் சக மனிதனின் இதயத்தை எட்டத் தவறிவிட்டான் என்பது ஒரு கசப்பான உண்மை. கோடிக்கணக்கான டாலர்களை அழிவு ஆயுதங்களுக்காகச் செலவிடும் நாடுகள், ஒரு துளி அன்பிற்காக ஏங்கும் எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கத் தவறுவது ஒரு முரண்பாடான நகைச்சுவையே அன்றி வேறில்லை.

உயிர்த்தெழுதல் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல, அது இன்றும் நம் சமகாலத்தில் நிகழ வேண்டிய ஒரு மன மாற்றம். "கல் அகற்றப்பட்டது" என்பது வெறும் பௌதிகச் செயல் அல்ல. அது மனித இதயங்களை மூடியிருக்கும் வெறுப்பு, பொறாமை மற்றும் சுயநலம் எனும் கற்கள் அகற்றப்பட வேண்டும் என்பதற்கான அடையாளம். இன்றைய போர்ச் சூழலில் ஆண்டவரின் உயிர்ப்பு நமக்குத் தரும் செய்தி மிகத் தெளிவானது: வெறுப்பால் வெறுப்பை ஒருபோதும் வெல்ல முடியாது. அன்பால் மட்டுமே வன்முறையை வீழ்த்த முடியும். கல்லறைக்குள் அடக்கப்பட்ட மௌனம் எப்படி ஒரு உலகளாவிய பேரொளியாக மாறியதோ, அப்படியே இன்று அமைதிக்காக எழும் சிறிய குரல்களும் ஒருநாள் உலகளாவிய சமாதானமாக மாறும் என்ற நம்பிக்கையை நாம் கொள்ள வேண்டும்.

உயிர்ப்பு ஞாயிறு என்பது வெறும் புத்தாடை அணிந்து மகிழும் நாளல்ல. அது நம்முள் புதைந்து கிடக்கும் மனிதநேயத்தை உயிர்ப்பிக்கும் திருநாள். தனிமனித வாழ்விலும், உலக அரசியலிலும் "எல்லாம் முடிந்துவிட்டது" என்று நாம் எதைக் கருதி நம்பிக்கை இழக்கிறோமோ, அங்கிருந்து தான் வாழ்வின் புதிய பக்கங்கள் தொடங்குகின்றன. இஸ்ரேல் - ஈரான் பதட்டமோ அல்லது உலகளாவிய அதிகாரப் போட்டியோ எதுவாக இருந்தாலும், "வாழ்வுதான் இறுதி வார்த்தை" (Life is the last word) என்ற தத்துவமே நம்மை வழிநடத்த வேண்டும். கல்லறைகள் திறக்கப்படட்டும்! ஆனால் அவை போருக்காக அல்ல, புதைக்கப்பட்ட மனித நேயம் மீண்டும் உயிர் பெறுவதற்காக. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது முதலில் அருளியது ஆசீர்: "உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்" (யோவான் 20:19). அந்த அமைதி நம் வீடுகளிலும், நம் நாடுகளிலும், குறிப்பாகப் போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் உலகப் பகுதிகளிலும் நிலவட்டும் என்பதே இந்த உயிர்ப்பு சொல்லும் நிதர்சனமான உண்மை.




# அந்தோனி Anthony - ஒரு கண்ணோட்டம்

அருட்பணி அமிர்த யெயசேகரம்

பல மாதங்களாக எமது சூழலில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட அந்தோனி திரைப்படம் பலரின் எதிர்பார்ப்பிற்குத் திருப்தியாக இருந்தது அவதாகிக்கக் கூடியது. புதிதாகக் குடியேறிய மண்கும்பான், வெண்புரவிநகர் குடியிருப்புத் தொகுதியும், குருநகர் சூழலும் பார்வையாளருக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

இம்மாதம் 13ம் திகதி திரையரங்குகளில் "அந்தோனி" திரைப்படம் வெளிவந்துள்ளது.

அன்றைய தினம் யாழிலும், நோர்வே போன்ற வெளிநாடுகளிலும் இதன் சிங்கள, மலையாளப் பிரதிகள் அதே நாள் கொழும்பு, இந்திய - கேரள மாநிலத்திலும் வெளிவந்தது ஒரு சிறப்பு நிகழ்வாகும்.

"அந்தோனி" ஒரு சாதாரண மீனவன். "ஒரு நாள் ஆயுள்" என்ற ஏக்கத்துடன் கடலில் வலையுடன் கால்வைக்கும் ஒரு மீனவரின் போராட்ட வாழ்வியலின் ஒரு குறியீடு! அவனின் போராட்ட நெறிகளை அமைதியாக இளம் இயக்குநர்கள் வெண்புரவிநகர் சுகிர்தன் கிறிஸ்துராசா மற்றும் இராஜேஸ்வர் கதையாக்கம் செய்துள்ளார்கள். இவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

சுகிர்தன் தனது இளம் வயதில் மீனவர்களுடன் தொழில் புரிந்து அவர்களுடைய நாளாந்த அனுபவங்களைப் பட்டறிந்தவன். அவர்களுடைய வாழ்வியலை ஒரு திரைப்படமாகக் கொணரவேண்டுமென்று உள்ளத்தில் கருக்கொண்டான். அவனுடைய இம்முயற்சி வெற்றியும் கண்டது.

இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. விவசாயத்திற்கு அடுத்ததாக மீன்பிடித் தொழில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே அவர்களது நாளாந்த போராட்ட வாழ்வு சாதாரண மக்களுக்குச் செல்லவேண்டுமென்பது அவனது நெடுநாள் கனவு.

ஆழ்கடலில் மீன் பிடிக்கும் அந்தோனி (கயல் வின்சன்) ஒருநாள் கச்சதீவிற்கு அருகாமையில் உயிருக்குக் கடலில் போராடிய நளினியைக் காப்பாற்றுகிறான். உயிர்ப்பிச்சை பெற்ற நளினி (டிஜே பானு) உயிர் பாதுகாப்புக் கொடுத்த அந்தோனியோடு நன்றிக்கடனாகத் திருமண பந்தத்தில் இணைகின்றாள். மீனவ அந்தோனியின் சோகம் நிறை வாழ்வை ரிஜி செல்வத்தின் ஒளிப்பதிவுகள் அந்தோனியின் உணர்வலைகளைத் துல்லியமாக ஊடறுத்து நின்றன.

இசைஞானி இளையராஜாவின் பாடல் பின்னணி வலுக்கொடுத்திருக்கின்றது. வாழ்க்கை ஓட்டத்தில் அந்தோனி மனைவியும் பிள்ளையும் மிக ஆபத்தான நோயினால் பீடிக்கப்பட்ட செய்தியை வைத்தியர் அந்தோனிக்கு வெளிப்படுத்துகிறார். இவர்களின் வாழ்வு சுக்குநூறாகிறது. தமது ஒவ்வொரு செயலிலும் அர்த்தத்தை இழக்கிறார்கள்.

இச்செய்தியை மனைவிக்கு வெளிப்படுத்தத் திண்டாடுகிறான் அந்தோனி.

அந்தோனி கடலை நேசித்தான் - தனது தாயென்று அம்மா" என்றழைப்பான்.

அந்தோனியின் ஒரு சில தியாக வாழ்வின் சிறப்பியல்புகளை வெளிக்கொணர ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியைக் கொணர்ந்தமையை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம்.

மீனவனின் யதார்த்த வாழ்வை வெளிப்படுத்தும் ஒரு அவிழ்க்க முடியாத முடிச்சு இது.

பார்வையாளர்கள் பல தாக்கத்துடன் மண்டபத்தை விட்டு வெளியேறுகிறார்கள்.

# ஈஸ்டர் சிறப்பிதழ்

## மானத்தை இழந்து மாண்பின் விடியலானீர்

கடவுள் வடிவில் விளங்கிய இறைமகன்
கடவுளுக்கு இணையான நிலையின் பற்றகற்றி
மனித உருத்தாங்கி மரியின் மகனாகி
மனிதகுலத்தை மீட்கச் சிலுவைப் பலியானார்

மாற்றம் மிகு சமூகம் தளைக்க மனவுறுதியோடு
ஏற்றம்மிகு இறையரசின் நற்செய்தியானீர்
குற்றம்உணர்ந்தோர் மனம்வருந்தித் திருந்தினர்
சீற்றம்மிகு கொடியோர் சிலுவையில் அறைந்தனர்

அடிமையில் அமிழ்ந்த சமூகம் வாழ்வில் உரிமையுறவும்
அடிமையுற்றோர் வாழ்வு கதிரோனாய் எழுச்சியுறவும்
சத்தியம் தளைக்கப் பயணித்தீர் பாலஸ்தீனாவெங்கும்
நித்தமும் தளர்ந்திடவில்லை தந்தையின் சித்தம் நிறைவேற்ற

கடின உள்ளங்கள் கபடத்துடன் நோக்கினர்
கரைந்திடா மனங்களாய் கன்னத்தில் அறைந்தனர்
பழிகளும் பொய்களும் உண்மைக்கு மேலெழுந்தன
வழியெங்கும் சிலுவையோடு இழுத்தே வதைத்தனர்

பார்பதற்கேற்ற அமைப்போ விரும்பத்தக்க தோற்றமோ
பாரினர் அவருக்கு அளித்திடாது அவமானமாக்கினர்
குருதிபீறிட்ட மேனியில் இருந்த ஆடைகளை
உரித்தே எடுத்து அதன்மீது ஆவலும் கொண்டனர்

ஜெருசலேம் முதல் கல்வாரிவரை நொருங்குண்டீர்
ஜெயித்திடும் துன்பக்கலமதை தாழ்மையுடன் தாங்கினீர்
கல்லறையில் புதைத்தனர் மெய்யொளி பரப்பிய மேனியை
காவலர் விழிக்குமுன்னே காரிருள் நீக்கி உயிர்த்தெழுந்தீர்

புதிய பாஸ்கா செம்மறியாய் உலகில் எழுந்தீர்
பதியவில்லை இன்னும்மாந்தர் மனங்களில் உம்தியாகம்
போர்களும் போட்டிகளும் பணமும் பதவிமோகமும்
பாரெங்கும் நச்சுவேராய் படர்ந்தே செல்கிறது

அன்று உம்மை மானமிழக்கச் செய்த மனிதகுரோதம்
இன்றும் எம்சமூகங்களில் சங்கிலித் தொடராகிறதே
பெற்றோர் பெரியோரை மானமிழக்கத் துடிக்கும்
மாண்பற்றோர் உமது துகிலை உரிகின்றனரே

மனிதருள் புனிதா மனமிரங்கும் மனுக்குலத்திற்காய்
மனிதத்தை இழந்தே தவிக்கிறோம் ஆற்றிட ஆருமின்றி
கொடியவரின் கூட்டத்திலும் கோமகனாய் நின்றவரே
விடியலின் ஒளியாய் எம் உளமதில் உயிர்த்திடுவீர்

S.M. வுளோறன்ஸ்
இளவாலை.



## புரட்டப்பட்ட பாறை சொன்ன கதை

கல்லறை ஒன்றைக் காவல் காக்க
வாயிலிலே வைக்கப்பட்ட கல் ஒன்று
விண்ணவனின் உயிர்ப்பை உரைக்க
வழிவிட்டு உலகிற்குச் சொன்ன கதை


வியாழன் இரவெல்லாம் விசாரித்து
விழித்ததும் கசையடி வழங்கி
கல்வாரி நோக்கிக் கழு மரத்தோடு
களைத்துப்போய் நடந்த ஒருவனை
மரத்தோடு அறைந்து குருதி வழிய வழிய
மரணிக்கச் செய்து சிதைந்த சரீரத்தை
துணியொன்றில் சுற்றி, கல்லறையில் வைத்து
அதைக்காக்க நகர்த்தினர்
என்னை நான்கு பேர் இணைந்து

கல்லான என் நெஞ்சம் கூடக் கனிந்துவிட்டது
கள்வனைப்போல் அந்த இளைஞனைக் கண்டபோது
கொட்டித் தீர்த்த குருதிவெள்ளம்
எட்டிப்பார்த்தது துணிகளுக்கிடையில்
கொஞ்சமும் இரக்கமில்லா மாந்தர்களின் செயல்தானோ இது
அசைவற்றுக்கிடந்த அந்த உடலைப் பார்த்துக் கொண்டு
அப்படி என்னதான் குற்றம் புரிந்தாரோ என எண்ணியபடியே
காணாமல் போனது அந்த வெள்ளியிரவு - விடை
காண்பித்தது அடுத்தநாள் சனியிரவு

சூரியன் கல்லறைக்குள் கருக்கொண்டது போல
சூழ்ந்து வந்தது சுடரொளி ஒன்று
இறக்கைகளுடன் மனிதர்களும் நடுச்சாமம் இறங்கி
இடிமுழுங்கும் சத்தத்துடன் ஏதேதோ புரிந்தனர்
நான்குபேர் இணைந்து நகர்த்திய என்னை
நானே அறியாது தானாக நகர்த்திய
ஒப்பற்ற ஓர் உந்துசக்தி
அசைவற்றுக் கிடந்த உடல்
ஆலமரம்போல் அருகிலே எழுந்து நிற்கின்றது
கட்டுக்கதை செய்ய நான் என்றும் மனிதனில்லை
இதுதான் கண்டகதை

அருட்சகோதரன் யேசுதாசன் கஸ்ரோன்

## இயேசு இறந்துயிர்த்த ஞாயிறு



உலகமே வணங்கும் இறைமகன் யேசு
இறந்துமே உயிர்த்த புதுமை நாளிது
தலைமைக் குரும் பீடமுயர் சிலுவையின் காட்சி
துதிப்போர் கண்கள் பனித்திடும் சாட்சி
வலம்வரும் பூமியில் வாழ்வோர் நலம்பெற
வலுமிகு சிலுவையை சுமந்தே இறந்தவர்
உலகமே வியந்திட உயிர்பெற்று எழுந்தவர்
உன்னத நாளே உயிர்த்த ஞாயிறு

கலாபூசணம் கே.ஆர்.திருத்துவராஜா

## வாழ வழிவிடு



அ.அன்புமுதன்
புனித மடுத்தினார் குருமடம்

கண்டேன் கல்லறையில் ஓர் வானம்
நகரும் உலகினை நாள்வர் தூக்கும்முன்
நம் நாவால் இவ் உலகை அழித்து விடுகின்றோம்
நம் நாவது வீழ்ந்து பின் யாருளர் நமக்கு

அன்றோ பசியிருந்தது உணவில்லை
தூக்கம் இருந்தது படுக்கை இல்லை
துக்கம் இருந்தது தேற்ற உறவுகளிருந்தன
பணம் இல்லை எல்லோரிடத்திலும் மனமிருந்தது


இன்றோ உணவிருக்கிறது உண்ண நேரமில்லை
படுக்கை இருக்கிறது நிம்மதியான தூக்கமில்லை
பகிரவு மனமில்லை எல்லோருக்கும் பணப்பைத்தியம்
கவலைகளில்லை ஆனால் உறவுகளின்றி
தனிமையில் தவிக்கின்றோம்

தடம் புரண்டுகொண்டிருக்கும் மனித வாழ்க்கையிலே
அரசியலும் பணத்தாசையும் துடுப்பாட்டம் ஆகிறது
மனிதத்தின் அவலங்களும் கதறல்களும்
சுயநலம் என்னும் மிருகத்திடம் சிறைப்பட்டுள்ளது

காலத்தின் ஓட்டப் பயணத்தில்
செல்வமும் பணமுமே
கடலின்றி மீன் வாழ முடியாதது போல்
இவ்வுலகத்திலே பணமின்றி
யார் இருக்க முடியும் என மாறிவிட்டது

மனிதமே விழித்தெழ சுருண்டு கிடக்கும்
உலகினிலே சரித்திரம் படைக்க மீண்டெழு
காலத்தின் குரல்களுக்கு செவிகொடுக்க
மனிதமே வாழ்வாங்கு வாழ விழித்தெழு

## எதற்காக?





அவமானத்தின் சிலுவையை நீர் சுமந்தது எதற்காக?
அவமானப்படுத்தப்பட்டு அநாகரிகமான முறையில் நடத்தப்பட்டு
கள்வர் கூட்டத்தோடு ஆடையில்லாமல்
இரத்தம் தோய்ந்த உடலோடு சிலுவையில் அறையப்பட்டீர் எதற்காக?

மனிதகுலத்தின் பாவங்கள் படுங்கோரமாகப் பஞ்சுபோன்ற
கரங்களையும் பாதங்களையும் பதம் பார்த்தது எதற்காக? அன்று
பாலை நிலத்தில் வெண்கலப்பாம்பு உயர்த்தப்பட்டது போல
இன்று புதிய ஏற்பாட்டில் இறைமகன் உயர்த்தப்பட்டது எதற்காக?

இயேசுவே நீ எதற்காகச் சிலுவையைச் சுமந்து போனீர்?
கழுமரம் எங்காவது பூ பூக்குமா? அன்று கல்வாரிக் குன்றிலே
இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்
கழுமரத்தில் பூ ஒன்று பூத்தது அது எதற்காக?

அவமானத்தின் சின்னம்
ஆராதனைக்குரிய சின்னமானது எதற்காக?
உழுப்பட்ட நிலம்போல் ஓர் உடல் ஒன்று
சிலுவையில் உயிர் நீத்தது எதற்காக?

தரணியைத் தலையாண்ட தாயகம் இன்று
ஒருதுளி தண்ணீருக்காகத் தவிப்பது எதற்காக?

தகர்க்கப்பட்ட கல் தள்ளப்பட்டது எதற்காக?

அன்பரின் தோளில் அவமானச் சிலுவை,
தரையை முத்தமிடும் முக விழுகை
தாய், சேய் அன்பு நெஞ்சங்களின் சந்திப்பு
சீமோனின் கருணை உள்ளம்
துணிச்சலான ஓர் பெண்மணி
இலக்கு நோக்கிய பயணத்தில்
இரண்டாம் முறை வீழ்ச்சி
அல்லல்படும்போது ஆறுதல் மொழிகள்
விடாமுயற்சியுடன் விழுந்து கிடக்கும் பேரன்பு
அடிப்படை மனித உரிமை அகற்றப்படல்
இலவசமான மூன்று ஆணிகள்
அளவிட முடியாத பேரன்பு
அகன்ற கைகளுடன்
தாயின் மடியில் ஓர் மரணம்
புத்துயிர் பெறப் புதைக்கப்படல்
இவை எல்லாம் எதற்காக?
இரண்டு கைகளையும் விரித்துச்
சொன்னாய் இவை
அனைத்தும் எனக்காக என்று
எனக்காக என்று....

அருட்சகோதரன் அ.அருண்ராஜ்

## திராட்சைக் காடி



இது
புது யுகத்தின்
சுதந்திரத்துக்குள்
வந்த தந்திரம்
இருளின் ஆட்சிகளாக
தரையில் விழுந்து
வெடித்துச் சிதறும்
மாரிப் பொழிவுகள்
கலையாதோவெனக்
கனாக் காண்கிறது
சர்வதேசம்...

நவீன அகிம்சை
நிழல்களுக்குள்
அணுவாயுதப்
பரிசோதனைகள்

நடத்தும் அர்த்தமற்ற
உலகு இது...

அறிவு ஆயுதங்களாக
அழிவாயுத உற்பத்திகள்
நடக்கின்றன...

ஈசோப்பில் பொருத்திய
புளித்த திராட்சைக்கும்
வழியில்லாமல்
கல்வாரிகளாக்கப்படுகிறது...

சிலுவை சுமத்திய
பழிச் சொல்லுக்குள்

இன்றும் எம்
பாவப் பொறுத்தலுக்காக
பரமன் கெத்சமனிக்குள்
சென்று கொண்டிருக்கிறார்

எம்.யோண் பற்றிக்

## வெள்ளியில் ஞாயிறு

ஒரு முறையல்ல
பலமுறை கூறினார்
நாட்கள் மூன்றிலே
உயிர்த்தெழுவேனென்று...

ஓடோடிச் சென்றனர்
கல்லறைக்கு
வெறுமையாகிக் கிடந்த
எம் வாழ்வாதாரத்துக்கு
ஒரு விடிவு கிடைத்ததென்று...

அன்று
மகதலா மரியாவின்
செய்தி கேட்டு
கலங்கிய
சீடர்களின்
செவிப்பறைகள் பல
திறந்து கிடந்தன...

இன்றோ பல
கல் நெஞ்சங்கள்
தகர்க்கப்பட்டுக்
கொண்டிருக்கின்றன...

உயிர்ப்பின் ஞாயிறுகள் பல
வெள்ளியின் ஞாயிறுகளாகி-
ன்றன...

யோ.யோய் பேர்சி

## காலத்தின் குரல்

மாலையில் புரண்டோடும்
அலைகடலின் அழகினைக் கண்டு
மதிமயங்கி மனதினைக் கரையோரம் விட்டெறிந்தேன்
வானவீதியில் வலம்வரும் பட்சிகளின் ஊர்வலத்தில்
காலமேதோ கருத்திட வருவதைக் கண்டறிந்தேன்

மத்திய கிழக்கின் மாசேனைக்கு அஞ்சி
ஆதவனும் ஆழியுள் ஒழிந்திருந்தது
ஏவுகணைகளின் ஏவல்கருக்கஞ்சி மறைந்திட்டது
திங்களும் தேய்ந்து தன்னை

வீதிகளுக்கும் ஆசைவந்தது இரத்தமதைப் பருகிட
மானிடருக்கும் ஆசை வந்தது வீதியை
வேகமாகக்கடந்திட
ஆசைகள் ஒன்றாக ஆபத்துக்கள் வந்ததுவோ - இல்லை
விபத்துக்கள் மலிந்தன வீதிகள் மகிழ்ந்தன

மரங்களெல்லாம் அலைகின்றன சுவாசிக்க காற்றின்றி
மண்ணெல்லாம் விம்மின அழக்கூடக் கண்ணீரின்றி
கடல்களெல்லாம் களஞ்சியமாயின
கழிவுகளைச் சேர்ப்பதற்கு
காலமே குறலெழுப்பியது சாவு இனி மலிவென

காலமொரு குரல் செய்தது ஞாலம் இனி கைது என
போதையொரு கைவிலங்கு பூண்டுவிட்டீர் மானிடரே
சொற்களே வந்திடும் போதையால் என்றாயே
பொன்னால் செய்தாலும் கைவிலங்கு
கைவிலங்கு தானே

அ. அருள்வளன்

## கல்லறை திறந்ததே



கல்லறை திறந்ததுவே
இருளின் ஆட்சியை உடைத்தெறிந்தே
மூடிய கதவுகள் திறந்தனவே
மரணத்தின் சங்கிலியை உடைக்கவே

மௌனத்தில் இருந்த கல் உருண்டதே
மனிதனின் வாழ்விற்கு வெளிச்சமாய்
கண்ணீர்த் துளிகள் மகிழ்ச்சியானதே
கடவுளின் வாக்கு நனவாகியதால்

சிலுவையின் வேதனை வீணாகவில்லையே
விண்ணக வேந்தன் விடியலால்
உயிர்த்தெழுந்த நாதன் வாழ்வு தந்தார்
உலகெங்கும் புது நம்பிக்கையை விதைத்தார்

எம் கல்லறைகளைத் திறப்போம்
புதுக் கிறிஸ்துவாக வாழ்வோம்
நம்பிக்கை தனை விதைப்போம்
பிறர் நலமுடன் வாழ வழி சமைப்போம்

அ.ஆகாஸ்
சவேரியார் குருத்துவக் கல்லூரி

## உயிர்ப்பின் ஒளி

மரணத்தின் இருள் மறைந்து
மறுபிறப்பின் விடியல் உதித்தது
மௌனக் கல்லறைக் கதவு திறந்து
மகிழ்ச்சியின் கீதம் எழுந்தது

சிலுவையில் சுமந்த துன்பம்
சிந்திய இரத்தம் எமக்காக
அன்பின் அர்த்தம் கற்றுக்கொடுக்க
ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் இன்று

மன்னிப்பின் மென்மை சொல்லி
மாற்றத்தின் தீயை ஏற்றி
உயிர்த்தெழுந்த தினம் இன்று
உலகம் முழுவதும் அமைதி பொங்கி

ஈஸ்டர் நாள் நம்பிக்கையின் நாள்
இறைவன் அன்பின் நிரந்தர சாட்சி
இதயம் திறந்து வாழ்த்துவோம் நாம்
இனிய உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்

எ.எரிக்நிஷான்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

## சுமத்தாது சுமப்போம்



உலகம் அழுகிற அளவுக்கு
மரிமாறப்பட்டது கடவுளின் அன்பு
ஓசான்னா எல்லாம்
ஒப்பாரிகளாக மாறியதால்
ஒலிவ மரக்கிளைகள் எல்லாம்
ஒழிந்து போய்க்கிடக்கின்றது
பிலாத்து கை கழுவிய தண்ணீர் கூட
ஆசீர் நீராய் மாறிவிடும்
அவல காலத்தில்
அந்தரித்துக் கிடக்கிறோம்

கல்வாரிப் பயணங்களில்
கழுவலாம் பாவச்சுமை என
கருதுவதில் பயன் இல்லை
மனதில் மாற்றம் இன்றி
மத அனுட்டானங்கள்
மண்ணில் எமக்கு எதற்கு?

பசாம் ஓதிப் பாவம் கழுவலாம் என்றால்
நல்ல கள்வனுக்கு அடுத்துதிருந்தவனும்

அன்றைக்கே வான்வீடு சென்றிருப்பான்
சிலுவையில் அறைந்த யூதர்களும்
சிம்மாசனம் ஏறியிருப்பர்
முப்பது வெள்ளிக்காசும்
முகூர்த்தப் பரிசாக
முன்னணி பெற்றிருக்கும்

தவக்காலம் முடிவுற்று
உயிர்ப்பு விழாவும் வந்துற்றது
தவக்காலத்தில் என்ன செய்தோம்?
வீட்டு வளவில் கட்டிய
ஆட்டு கிடாயை பார்த்து
ஈஸ்டர் எப்போது வரும் என்று
ஏங்கியே கழிந்தது எங்கள் தவக்காலம்
இயேசுவிலும் வாழ முடியவில்லை
இயேசுவுக்காகவும் வாழ முடியவில்லை
இயேசுவாகவும் வாழ முடியவில்லை
யேசு தன் சிலுவை
சுமக்கவில்லை
பிறர் சிலுவை சுமந்து நின்றார்

அ. அஸ்விகன்

நாம் எம் சிலுவையும்
சுமக்கவில்லை
பிறர் சிலுவையும்
சுமக்கவில்லை
இயேசுவில் சிலுவை
சுமத்துகிறோம்
பிறரிலும் சிலுவை
சுமத்துகிறோம் சிந்திப்போம்..

ஈஸ்டர் சிறப்பிதழ்

# குடும்பங்களில் உயிர்ப்பு

## மன்னிப்பு, சமாதானம், குணமடைதல், புதிய தொடக்கம்



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

**அன்பின் மகிழ்வு**

ஒரு குடும்பம் இருந்தது. அங்கே அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் இருந்தன. ஆனால் அந்த வீட்டில் அமைதியில்லை. உரையாடல் இல்லை. ஒருவருக்கொருவர் உள்ளம் திறக்க இடமில்லை.

தந்தை குடிப்பழக்கத்தின் பிடியில் சிக்கியிருந்தார். தாய் மனச்சுமையாலும் துயரத்தாலும் உள்ளிருந்து நொறுங்கி யிருந்தாள். பிள்ளைகள் அச்சத்துடனும் குழப்பத்துடனும் வளர்ந்தனர். வெளியில் பார்க்கும் கண்களுக்கு அது ஒரு சாதாரண குடும்பமாகத் தோன்றியிருந்தாலும், அதன் உள்ளார்ந்த உலகம் மெதுவாக உடைந்து கொண்டிருந்தது. புனித வாரத்தின் நாட்க-ளில் அந்த வீட்டில் ஒரு சிறிய மாற்றம் தொடங்கியது. சிலுவையின் முன் குடும் பத்தினர் அமைதியாகக் கூடினார்கள். பெரும் வார்த்தைகள் பேசப்படவில்லை. உடனடி அதிசயங்களும் நிகழவில்லை. ஆனால் ஒரு மாற்றத்தின் விதை விழுந்தது. ஜெபம் தொடங்கியது. கண்ணீர் வழிந்தது. நீண்ட நாளாய் அடக்கப்பட்டிருந்த வலி மெதுவாகச் சொல்லாக்கம் பெற்றது. மன்னிப்புப் பற்றிய உரையாடல் உருவானது. குற்றச்சாட்டுகள் சற்றுச்சற்றுக் கரைந்தன. சிதைந்து கொண்டிருந்த அந்த இல்லத்தின் வெறுமைக்குள், உயிரின் மெல்லிய அசைவு மீண்டும் தோன்றியது. குடும் பங்களைக் குணப்படுத்தும் உயிர்ப்பு விழா. இதுவே உயிர்ப்பு விழா குடும்பங்களுக்கு அளிக்கும் ஆழ்ந்த செய்தி. உயிர்ப்பு விழா என்பது வெறும் திருச்சபை விழா மட்டுமல்ல. அது இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும் ஒரு வரலாற்றுச் சின்னமாக மட்டும் நின்றுவிடுவ தில்லை. மாறாக, அது இன்று கூட மனித இல்லங்க-ளின் இருளுக்குள் நுழைந்து, உடைந்த உறவுகளைத் தொடர்ந்து, நம்பிக்கையிழந்த ,தயங்களில் புதிய உயிரை ஊட்டும் இறைவனின் செயற்பாடாகும்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் வேதாகமத்தில் முதலில் தோன்றும் விதத்தை நாம் கவனித்துப் பார்க்கும் போது, உயிர்ப்பு விழாவின் உண்மையான இறையியலை நன்கு அறிய முடிகின்றது. அவர் முதலில் வெற்றியின் மாட்சியைக் காட்ட வரவில்லை. கண்ணீர் சிந்திய மரிய மகதலேனாளின் துயரத்தின் நடுவே தோன்றினார். ஏமாற்றத்துடனும் குழப்பத்துடனும் எம்மாவுஸ்க்குச் சென்ற சீடர்களோடு நடந்தார். அச்சத்தால் கதவுகளை மூடியிருந்த சீடர்களின் நடுவே வந்து, "உங்களுக்கு சமாதானம்" (யோவான் 20:19) என்று உரைத் தார். இந்த ஒரு வசனம் உயிர்ப்பு விழாவின் முழுச் செய்தியையும் தாங்கி நிற்கிறது.

உயிர்த்தெழுதல் என்பது காயங்களை மறைக் கும் செயலல்ல. அது காயங்களுக்குள் சமாதானத்தைக் கொணரும் இறைவனின் அருள். இதனால்தான் புனித பவுல், "ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார்" (2 கொரிந்தியர் 5:17) என்று அறிவிக்கிறார். இது தனிமனித ஆன்மீக அனுபவத்திற்கே மட்டும் உரிய-தல்ல. குடும்பங்களுக்கும் சமமாகப் பொருந்துகிறது. பல இல்லங்கள் பழைய நினைவுகளின் சுமையாலும், மன்னிக்காத மனதாலும், தோல்விகளாலும், பேசப்படாத காயங்களாலும் கட்டுண்டிருக்கின்றன. ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும், உள்ளங்கள் வெவ்வேறு உலகங் களில் அலைகின்றன. சில இடங்களில் கோபமே பேசுகிறது. சில இடங்களில் மௌனமே பேசுகிறது.

சில இடங்களில் பொருளாதாரத் துயரம் அன்பை வாடச் செய்கிறது. வேறு சில இடங்களில் போதை, குடிப் பழக்கம், வன்முறை, மனச்சோர்வு, தனிமை, டிஜிட்டல் அடிமைத்தனம் போன்றவை குடும்ப வாழ்வின் உயிர்ச்சத்தையே உறிஞ்சுகின்றன.

இவ்வாறான சூழலில் உயிர்ப்பு விழா குடும்பங்களுக்குச் சொல்லவரும் செய்தி: எந்த இருளும் இறுதியல்ல. கல்லறை கடைசி நிலையாக இருக்க வில்லை. அதுபோலவே உடைந்த குடும்ப நிலையுமே இறுதி நிலையாக இருக்க வேண்டியதில்லை. இறைவ-னின் அருள், மனிதனின் தோல்வி முடிவடையும் இடத்திலேயே தன் புதிய தொடக்கத்தை ஆரம்பிக்கிறது.

திருச்சபைத் தந்தையரின் சிந்தனைகளும் இதையே உறுதிப்படுத்துகின்றன. குடும்பத்தை "குட்டித்திரு-அவை" எனப் புரிந்துகொள்ளும் மரபை வலுப்படு-த்திய புனித யோவான் கிறிஸ்தோத்தம், கிறிஸ்தவ இல்லம் என்பது வெறும் வாழ்விடம் அல்ல, இறை-பயம், ஜெபம், ஒழுக்கம், பரஸ்பர அன்பு ஆகியவை வளர வேண்டிய புனிதத்தளம் என்று உணர்த்தினா-ர். குடும்பம் என்பது மனித உறவுகளின் கூட்டுத்தொ-தாகை மட்டும் அல்ல அது இறைஅருள் செயற்பட வேண்டிய இடம்.

அதேபோல புனித அகஸ்தீனின் புகழ்பெற்ற வரிகள் நம்மை ஆழமாகத் தொடுகின்றன: "எங்களுடைய இதயம் உம்மில் இளைப்பாறும் வரையில் அமைதியடை யாது." இந்த உண்மை குடும்பங்களுக்கும் பொருந்தும். இறைவனை தங்கள் வாழ்வின் மையமாக இழந்துவிட்ட குடும்பம் வெளியில் ஒழு-ங்காக இயங்கினாலும், அதன் உள்ளார்ந்த உலகம் உண்மையான அமைதியை அடைய முடியாது. உயிர்த்த ஆண்டவரே குடும்பத்தின் இழந்த மையத்தை மீண்டும் நிலைநிறுத்துபவர்.

புனிதர்களின் வாழ்க்கையும் இந்த நம்பிக்கையைத் தெளிவாக்குகின்றது. புனித மொனிக்கா தன் மகன் அகஸ்தீனுக்காக நீண்ட ஆண்டுகள் கண்ணீருடனும் விடா-முயற்சியுடனும் ஜெபித்தார். உடனடி மாற்றம் நிகழவில்லை. ஆனால் இறைவனின் அமைதியான செயற்பாடு அவரின் வாழ்வின் நின்றுவிடவில்லை. ஒருகாலத்தில் திசைதவறிச் சென்ற அகஸ்தீன், பின்னர் திருச்சபையின் உன்னத சிந்தனையாளரும் புனிதருமாக உயர்ந்தார். இந்த நிகழ்வு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு உறுதியான நம்பிக்கையைஅளிக்கின்றது.

வழிதவறிச் சென்ற குடும்ப உறுப்பினர் ஒருவரைப் பார்த்து "இவர் இனி மாறமாட்டார்"என்று தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக, "இறைவனின் அருள் இன்னும் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது"என்று நம்புவதற்கான அழைப்பே உயிர்ப்பு விழா.


திருத்தந்தையரின் போதனைகளும் குடும்பத்தை உயிர்த்தெழுதலின் ஒளியில் உயிர் ஊட்டம் பெறச்செய்கின்றன. புனித இரண்டாம் யோவான் பவுல் குடும்பத்தை "உயிரின் மற்றும் அன்பின் சமூகமாக" வர்ணித்தார். இந்த வரியில் குடும்பத்தின் கிறிஸ்தவ உண்மை முழுமையாக அடங்கியுள்ளது. குடும்பம் ஒரு சட்டரீதியான அமைப்பு மட்டுமல்ல அது உயிரை ஏற்று-க்கொள்ளும் இடம், அன்பைப் பகிரும் இடம், மனிதரை மனிதனாக்கும் இடம். திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஒரு கருத்தோ, ஒரு ஒழுக்கக் கோட்பாடோ மட்டும் அல்ல அது உயிருள்ள ஒருவரோடு நிகழும் சந்திப்பு என்று வலியுறுத்தினார். குடும்பங்களுக்கும் இதுவே அத்தியாவசியம். அவர்களுக்கு ஒரு புதிய திட்டம் மட்டும் போதாது. உயிர்த் த கிறிஸ்துவோடு மீண்டும் ஒரு சந்திப்பு தேவை. திருத்தந்தை பிரான்சிஸ் குடும்ப வாழ்வில் அடிக்கடி பயன்படுத்தப்பட வேண்டிய மூன்று சொற்களை நினைவூட்டுகின்றார்: "தயவு செய்து", "நன்றி", "மன்னிக்கவும்." இந்த எளிய சொற்களே பல வீடுகளில் உயிர்த்தெழுதலின் முதல் ஒளிக்கதிர்களாக மாறட்டும்.

ஆகவே, கிறிஸ்தவ பார்வையில் குடும்பம் வெறும் சமூக அலகு அல்ல. அது அன்பு போதிக்கப்படும் முதல் தளம். மன்னிப்பு வடிவம் பெறும் முதல் இடம். தியாகம், பொறுமை, கருணை, நம்பிக்கை ஆகியவை அன்றாட வாழ்வின் வழியே கற்றுக் கொள்ளப்படும் முதல் சமூகமாகும். இதுவே குடும்பத்தை "குட்டித்திருஅவை" என அழைக்கத் தூண்டும். ஏனெனில் உயிர்த்த கிறிஸ்து புதுப்பிக்க விரும்புவது முதலில் ஆலயச் சுவர்களை அல்ல, மனித உள்ளங்களை யும் உறவுகளையும்.

குறிப்பாக உடைந்த குடும்பங்களுக்குள் இது ஒரு விசேஷ அழைப்பாக ஒலிக்கிறது. மன்னிக்க முடியா-மல் உடைந்து போனவர்களுக்கு அது புதிய தொடக்கத்-தின் வாயிலாகிறது. குடி அல்லது போதைப் பழக்கத்தால் நொறுங்கிய வீடுகளுக்கு உயிர்ப்பு குணமடைதலின் நம்பிக்கையாகிறது. நம்பிக்கையை இழந்த தாய்மார் களுக்கும் சோர்வுற்ற தந்தையருக்கும் அது பொறுமையுடனான எதிர்பார்ப்பின் செய்தியாகிறது. நீண்டகால மௌனத்தில் மூழ்கிய குடும்பங்களுக்கு இது உண்மையான உரையாடலின் அவசியத்தை நினைவூட்டுகின்றது. நீண்ட நாட்களாக ஜெபமின்றி வாழும் வீட்டிற்கு இது இறைவனை மீண்டும் நடுவில் அமர்த்தும் திருப்புமுனையாகிறது

ஆனால் உயிப்புத் தரும் நம்பிக்கை வெறும் உணர்ச்சிப்பூர்வமான ஆறுதல் அல்ல. அது நடைமுறை மாற்றத்தையும் வேண்டிநிற்கின்றது. குடும்ப மாற்றம் பெரும் அதிசயங்களால் மட்டுமே தொடங்க வேண்டியதில்லை. சில நேரங்களில் ஒரு சிறிய குடும்ப ஜெபத்திலேயே அது ஆரம்பமாகலாம் . பல ஆண்டுகளாக மனத்தில் வைத்திருந்த காயத்திற்கிடை-யே, ஒருவரிடம் ஒருவர் "மன்னிக்கவும்" என்று சொல்லும் தாழ்மையில் அது பிறக்கலாம். அடிமைத் தனத்தில் சிக்கியிருப்பவரை வெறுப்போடு அல்ல, உதவியின் பாதைக்கு அழைத்துச் செல்லும் தீர்மானத்-தில் அது தொடங்கலாம். ஒரே மேசையில் குடும்பமாய் அமர்ந்து உணவருந்தும் எளிய பழக்கத்-திலும் அது உருவாகலாம். ஞாயிறு திருப்பலிக்கு மீண்டும் குடும்பமாய் செல்வதிலும் அது மலரலாம். உயிர்த் தெழுதல் என்பது கல்லறையின் கதையாக மட்டும் இருக்க வேண்டியதில்லை. அது வீடுகளின் கதையாகவும் மாற வேண்டும் உடைந்த வீட்டில் சமா-தானம் திரும்பும் பொழுது அது ஒரு உயிர்த்தெழுதல். அழுகையால் நிரம்பிய இடத்தில் ஜெபம் பிறக்கும் பொழுது அது ஒரு உயிர்த்தெழுதல். அடிமைத்தனத்தில் சிக்கியவர் உதவி பெற முன்வரும் பொழுது அது ஒரு உயிர்த்தெழுதல். மன்னிக்க முடியாமல் கடினமாக இருந்த இதயம் மெதுவாக கரையத் தொடங்கும் பொழுது அது ஒரு உயிர்த்தெழுதல். "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" (யோவான் 11:25) என்ற ஆண்டவரின் வார் த்தை, மரித்தவர்களுக்கான நம்பிக்கை மட்டுமல்ல உயிரற்றுப் போகும் குடும்பங்களுக்கான நற்செய்தியும் ஆகும். உயிர்த் த ஆண்டவர் நம் ஆலயங்களில் மட்டுமன்றி, நம் வீடுகளிலும் எழ விரும்புகிறார். அவரை உள்ளே வரஅனுதித்தால், அவர் வாழ்வின் எல்லா நிலைகளையும் உடனே மாற்றாமல் இருந்தாலும், மரணத்தின் மொழியை உயிரின் மொழியாக மாற்றத் தொடங்குவார். அதுவே உயிர்ப்பு விழாவின் அதிசயம். உயிர்ப்பு விழா ஒரு திருநாள் மட்டும் அல்ல உடைந்த அமைதியின குடும்பம் மீண்டும் குடும்பமாக மாறும் அருளின் தொடக்கமாகும்.

# "ஆண்டவர் உண்மையிலேயே உயிர்த்தெழுந்துவிட்டார்! அல்லேலூயா!"



### இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்விலே நாமும் இணைவோம்

இயேசுக் கிறிஸ்துவின் சிலுவைச் சாவு சீடர்களிடையே ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. தாங்கள் நம்பிய மெசியா கொல்லப்பட்டு விட்டார் என்ற ஏமாற்றமும், யூதத் தலைமைகளுக்கு அஞ்சிய பயமும் அவர்களை ஒரு இருண்ட அறைக்குள் முடக்கி வைத்திருந்தது. ஆனால், அந்த இருளைக் கிழித்துக்கொண்டு வந்த உயிர்ப்பின் ஒளி, அவர்களை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அவர்களில் யார் யாரெல்லாம் மகிழ்ந்தார்கள்? ஏன் மகிழ்ந்தார்கள்? என்பதை அறிந்து அதில் நாமும் இணைவோம்

### மகதலா மரியாள் துயரம் தீர்ந்த மகிழ்ச்சி

உயிர்த்த ஆண்டவரைக் கண்ட முதல் நபர் மகதலா மரியாள். வேதாகமத்தின்படி, வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் அவர் கல்லறைக்குச் சென்றபோது, அங்கே இயேசுவின் உடல் இல்லை. அவர் அழுதுகொண்டிருந்தபோது இயேசு அங்கே தோன்றினார். மகதலா மரியாள் இயேசுவைத் தனது உயிருக்கு மேலாக நேசித்தார். தனது பாவங்களுக்காக மன்னிப்புப் பெற்று, இயேசுவைப் பின்பற்றுபவராக மாறிய அவருக்கு, இயேசுவின் மரணம் தாங்க முடியாத துயரத்தைத் தந்தது. இயேசு அவளிடம், "மரியா!" என்றார். அவர் பக்கம் திரும்பி, எபிரேய மொழியில் "ரபூனி" என்றார். (இதற்குப் "போதகரே" என்பது பொருள்). (யோவான் 20:16). இயேசு "மரியா!" என்று பெயர் சொல்லி அழைத்த அந்தத் தருணம், அவரது அழுகையை ஆனந்தமாக மாற்றியது. மரியாளின் மகிழ்ச்சி என்பது ஒரு தனிப்பட்ட உறவின் வெளிப்பாடு. ஆண்டவர் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தி, ஒரு பெண்ணின் வழியாக உலகுக்கு முதலில் அறிவிக்கப்பட்டது என்பது வேதாகமத்தின் ஒரு புரட்சிகரமான அம்சமாகும்.

### இயேசுவின் சீடர்கள் பயம் நீங்கிய மகிழ்ச்சி

இயேசுவின் பன்னிரு சீடர்கள் (யூதாசைத் தவிர) யூதர்களுக்குப் பயந்து கதவுகளைப் பூட்டிக்கொண்டு அமர்ந்திருந்தனர். அப்போது இயேசு அவர்கள் நடுவில் வந "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இயேசு தங்களை அநாதைகளாக விட்டுச் செல்லவில்லை என்பதையும், இயேசு சொன்னது போலவே மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதையும் அவர்கள் கண்கூடாகக் கண்டனர். மரணத்தைப் பற்றிய அச்சம் அவர்களை விட்டு நீங்கியது.. "இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்ட சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்"(யோவான் 20:20). சீடர்களின் மகிழ்ச்சி என்பது " உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கை". தாம் எதிர்பார்த்துக் கொண்டாடிய மெசியா தம்மை அப்படியே கைவிட்டுவிடுவாரோ என அவர்கள் சந்தேகத்துடன் பார்த்த அனைத்தும் இப்போது உண்மையாகின.

> 'இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' (மத்தேயு 28:20) என்ற வாக்குறுதி உயிர்ப்பின் மூலமே உண்மையானது. அவர் இன்றும் நம்மோடு வாழ்கிறார் என்பதே நமக்குப் பெரும் மகிழ்ச்சி.

### எம்மாவு சீடர்கள் தெளிவு பெற்ற மகிழ்ச்சி

எருசலேமிலிருந்து எம்மாவு நோக்கிச் சென்ற இரு சீடர்கள் மிகவும் சோகமாக இருந்தனர். வழியில் அவர்களோடு இணைந்த இயேசு, மறைநூலை அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் அவரை அடையாளம் காண வில்லை. ஆனால் அவர் அப்பத்தைப் பிட்கும்போது அடையாளம் கண்டு கொண்டனர். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, "வழியில் அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் கொழுந்துவிட்டு எரியவில்லையா? என்று பேசிக்கொண்டார்கள்"(லூக்கா 24:32). இயேசு ஏன் மரிக்க வேண்டும், அவர் ஏன் உயிர்க்க வேண்டும் என்ற இறைத்திட்டம் அவர்களுக்குப் புரிந்தது. அறிவுபூர்வமான தெளிவும், ஆவிக்குரிய எழுச்சியும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இவர்களது மகிழ்ச்சி அவர்களை உடனடியாக எருசலேமுக்குத் திரும்பிச் சென்று மற்றவர்களிடம் சான்று பகரத் தூண்டியது.

### தோமா விசுவாசத்தின் மகிழ்ச்சி

இயேசு உயிர்த்த போது அங்கே இல்லாத தோமா, "நான் அவர் காயங்களைத் தொடாதவரை நம்பமாட்டேன்"- என்றார். எட்டாம் நாள் இயேசு தோமாவுக் காகத் தோன்றி, அவரது ஐயத்தைப் போக்கினார். "இதோ என் கைகள் இங்கே உன் விரலை இடு உன் கையை நீட்டி என் விலாவில் இடு ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" (யோவான் 20:27)தனது பலவீனமான விசுவாசத்தை இயேசு மன்னித்ததை யும், அவர் உண்மையிலேயே தேவன் என்பதையும் உணர்ந்தபோது தோமா அடைந்த மகிழ்ச்சி அளப்பரியது. தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார்" (யோவான் 20:28). தோமாவின் மகிழ்ச்சி என்பது சந்தேகத்தைத் தாண்டி, இறைவனைத் தொட்டுணர்ந்த ஒரு பெரும் ஆத்ம திருப்தியாகும்.

### நாம் ஏன் இன்று மகிழ்கின்றோம்?

இயேசுவின் உயிர்ப்பு அன்று இருந்தவர்களுக்கு மட்டுமல்ல, இன்று நமக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. மரணம் என்பது முடிவல்ல, அது ஒரு கதவு என்பதை மரணத்தின் மீதான வெற்றியின் மூலம் இயேசு நிரூபித்தார். இது நமக்குச் சாவைப் பற்றிய அச்சத்தை நீக்கி, நித்திய வாழ்வின் நம்பிக்கையைத் தருகிறது.


இயேசு சிலுவையில் சிந்திய இரத்தம் நம் பாவங்களைக் கழுவியது என்றால், அவரது உயிர்ப்பு நாம் நீதிமான்களாக் கப்பட்டோம் என்பதற்குச் சான்று. பாவ மன்னிப்பின் உறுதியை நிலைநாட்டினார். ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்: "இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்ற வாக்குறுதி உயிர்ப்பின் மூலமே உண்மையானது. அவர் இன்றும் நம்மோடு வாழ்கிறார் என்பதே நமக்குப் பெரும் மகிழ்ச்சி.

இன்று நாமும் கவலைகள், நோய்கள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் மன அழுத்தங்கள் எனும் பூட்டிய அறைகளுக்குள் முடங்கிக் கிடக்கும்போது, உயிர்த்த இயேசு நம்மிடம் வருகிறார். "அஞ்சாதீர்கள், நான் உலகை வென்றுவிட்டேன்" (யோவான் 16:33) என்ற அவரது வார்த்தை நமக்கு வாழ்வின் மீதான பிடிப்பையும், சவால்களை எதிர் கொள்ளும் துணிச்சலையும் தருகிறது. மனித வாழ்வின் மிகப் பெரிய அச்சம் "மரணம்" ஆனால் இயேசு அந்த மரணத்தின் மீது வெற்றிக்கொடி நாட்டினார். "சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?" (1 கொரிந்தியர் 15:55) என்று புனித பவுல் முழங்கியது போல, உயிர்ப்பு நமக்கு அழிவில்லாத நித்திய வாழ்வின் உறுதியை அளிக்கிறது. இது நம்மைச் சுற்றியுள்ள அழிவுகளையும், தீமைகளையும் கண்டு துவண்டுவிடாமல், ஒரு புதிய வானமும் புதிய பூமியும் உருவாகும் என்ற நம்பிக்கையில் நம்மை நிலைநிறுத்துகிறது.

இயேசுவின் உயிர்ப்பு என்பது ஒரு இறந்த காலச் செய்தி அல்ல, அது ஒரு நிகழ்கால அனுபவம். மகதலா மரியாளின் அன்பும், சீடர்களின் நம்பிக்கையும், எம்மாவு சீடர்களின் தெளிவும், தோமாவின் விசுவாசமும் இன்று நமக்கும் தேவைப்படுகிறது. இவர்களில் வெளிப்பட்ட அதே மகிழ்ச்சி நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் மலரட்டும். கல்லறை திறக்கப்பட்டது போல, நம் இதயக் கதவுகளும் திறக்கப்படட்டும். உயிர்த்த ஆண்டவரின் அருளும் அமைதியும் நம் அனைவரோடும் தங்கி, நம்மைப் புதிய படைப்புகளாக மாற்றட்டும்.

"ஆண்டவர் உண்மையிலேயே உயிர்த்தெழுந்துவிட்டார்! அல்லேலூயா! அவர் திருநாமம் போற்றப்படட்டும்" இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளி கிடைத்துவிட்டது. சாவிற்குப் பதில் வாழ்வு கிடைத்து விட்டது. எனவே, நாமும் சீடர்களோடு இணைந்து முழங்குவோம்: "ஆண்டவர் உண்மையிலேயே உயிர்த் தெழுந்து விட்டார்! அல்லேலூயா!"

இ.மத்தியூஸ் டியோனி BCA.MCA



**ஈகையில் பெரிது!**

"கொடுங்கள் பெறுவீர்கள்: வீசுவதே திரும்பும்"
சரியாகக் கொடுத்தால் முப்பதாக, அறுபதாக, நூறாகத் திரும்பக் கிடைக்கும்.

**'வறியோர்க் கொன்று ஈவதே மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர் துடைத்து'**

என்பது வள்ளுவரின் வாக்கு.
நமது சுயநலமில்லா ஈகையின் வழியாக இப்பூமியை சொந்தமாக்கிக் கொள்வோம்.
ஈகையின் போது பாத்திரமறிந்து ஈவோம்.

ஈஸ்டர் சிறப்பிதழ்

# அல்லைப்பிட்டி இடிந்த மாதா ஆலயம்

## ஓர் வரலாற்று கண்ணோட்டம்

**அல்லைப்பிட்டி மக்களிடையே வழங்கிவரும் வாய்மொழி மூலப்பாரம்பரியத்தின் அடிப்படையில் அல்லைப்பிட்டி கிழக்கில் மரியன்னைக்கு ஓர் ஆலயம் போர்த்துக்கேயரால் எழுப்பப்பட்டதாகவும் அதன்சிதைவுகள் இடிந்தமாதா கோவில் என்று அழைக்கப்பட்டு வந்த நிலையில் அதனை ஆய்வுக்கு உட்படுத்தி அதனைப் பற்றிய தரவுகளைத் தேடிய அடிப்படையில் இக்கட்டுரையை வரைகிறேன்.**

1505இல் இலங்கைக்கு வந்திறங்கிய போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண அரசில் நிலவிய உள்ளக முரண்பாடுகளால் நிரவாகத் தலையீடுகளை மேற்கொண்டு 1620இல் கடுமையான போராட்டங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். தம்முடைய நிர்வாகத்தை இலகுவாக்குவதற்கு முனைந்த இவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுப்பகுதியையும் 32 பற்றுக்களாகப் பிரித்து பற்றுக்கொரு கோவில் வீதம் அமைத்தனர். இவற்றில் தீவுப்பற்றில் காரைதீவு, ஊர்காவற்துறை, வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு,நயினாதீவு என ஆறுமாக முப்பத்து இரண்டு கோவிற் பற்றுக்கள் காணப்பட்டன.

இடிந்தமாதா கோவிலைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்பு போர்த்துக்கேயர் கால ஆவணங்களில் அல்லைப் பிட்டியில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் புனித சூசையப்பர் மற்றும் புனித தோமையார் ஆலயங்களைக் குறித்து விளக்குவது வாசகர்களுக்கு சிறப்பான விளக் கத்தை அளிக்குமென நம்புகிறேன்.

**புனிது சூசையப்பர் ஆலயம்**

போர்த்துக்கேயர் வருகையின் பின் அல்லைப்பிட்டியில் வாழ்ந்த மக்களுக்கு கத்தோலிக்க மறை அறிமுகமாகி வளர்ந்துள்ளது. சான்றாக 1621ஆம் ஆண்டிற்கும் 1623ஆம் ஆண்டிற்குமிடையே அல்லைப்பிட்டியில் போர்த்துக்கேயர் காலத்தில் புனித சூசையப்பர் ஆலயம் அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனை பிரான்சிஸ்கன் சபைக்குருக்கள் அமைத்துள்ளனர். அக்காலத்தில் மாபிட்டி அல்லது அல்லைப்பிட்டியென இவ்விடம் அழைக்கப்பட்டமையைக் காணமுடிகின்றது. இதனை Martin Quéré அவர்கள் எழுதிய "Christianity in Sri Lanka under the Portuguese Padroad 1597-1658" என்ற நூலில் காணலாம். மாபிட்டியில் அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலயம் பற்றி CONQUISTA ESPIRITUAL DO ORIENTE REPARTIDA EM TRÊS என்ற நூலின் மூன்றாம் பாகத்தில் போர்த்துக்கேய மொழியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "அதாவது பதினெட்டாவது தேவாலயம் மாபிட்டியில் அமைந்துள்ளது. இது புனித சூசையப்பர் ஆலயம் என அழைக் கப்படுகின்றது. இங்கு 2300 மக்களையும் 400 சிறுவர் சிறுமியரையும் கொண்டுள்ளது. மொத்தமாக 2700 ஆன்மாக்களைக் கொண்டமைந்துள்ளது." இங்கு பதினெட்டாவது ஆலயமாக என்று குறிப்பிடக் காரணம் யாதென்றால் மேற்குறித்த நூலில் வரிசைக்கிரமமாக ஆலயங்கள் பற்றிய செய்திகள் விரித்துரைக்கப்பட்டு வந்ததன் படி இவ்வாலயம் அவற்றுள் 18ஆவதாக இடம்பெற்றமையே ஆகும்.

போர்த்துக்கேயர் காலத்துக் கணக்கெடுப்புக்களின் படி 1634 ஆம் ஆண்டில் ஊர்காவற்றுறை புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் 3820 பேரும் வேலணை ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 1380 பேரும் அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலயத்தில் 2700 கத்தோலிக்கர்களும் பங்கு மக்களாக அங்கம் வகித்துள்ளனர் என அறியக்கிடைக்கிறது.

**புனித தோமையார் ஆலயம்**

"CONQUISTA ESPIRITUAL DO ORIENTE REPARTIDA EM TRÊS, VOLUMES III PARTE" என்ற



போர்த்துக்கேய மொழியிலமைந்த நூலில்,"1603 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தரசன் தனதிவா (Tanadiva) எனுமிடத்தை பிரான்சிஸ்கன் சபைக் குருமாருக்கு வழங்கினான். அவர்கள் அங்கு உள்ள பையன்கள் பயில வென ஓர் கல்லூரியை அமைத்தனர். புனித திருமுழுக்கு அருளப்பருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயத்தையும் அமைத்தனர். பின்நாட்களில் இது அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்ட புனித தோமையார் ஆலயம், மண்டைதீவிலுள்ள தேவாலயம், வேலணையில் அமைக்கப்பட்ட ஆரோக்கிய அன்னை ஆலயம், சரவணையில் அமைக்கப்பட்ட மரியன்னை ஆலயம் முதலான ஆலயங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே அல்லைப்பிட்டியில் போர்த்துக்கேயர் காலத்தில் புனித சூசையப்பர் மற்றும் புனித தோமையார் ஆலயங்கள் வழிபாட்டிடங்களாக அமைந்துள்ளன என்பதை மேற்குறித்த சான்றுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒல்லாந்தர் கத்தோலிக்க மறைமீது கொண்ட வெறுப்பின் காரணமாக இவ்வாலயங்கள் இடித்தழிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

**இடிந்து மாதாகோவில்**

அல்லைப்பிட்டி மக்களின் இன்றைய தலைமுறையினரோ அவர்கட்கு முந்தைய தலைமுறையினரோ அதாவது 1900களின் முதற் காற்பகுதியில் பிறந்தவர்களோ புனித சூசையப்பர் ஆலயம் குறித்தோ அல்லது புனித தோமையார் ஆலயம் குறித்தோ அறிந்திருந்ததாக தோன்றவில்லை. எனினும் அவர்கள் அல்லைப்பிட்டி கிழக்கில் அமைந்திருந்த "இடிந்த மாதாகோவில்" என்று அழைத்த ஆலயத்தைப் பற்றி அறிந்துள்ளனர். இடிந்த மாதா கோவிலுடையது என நம்பப்படும் சிதைவுகள் ஏறத்தாள 2005 ஆம் ஆண்டுவரை காணப்பட்டதெனினும் வீடுகள் அமைப்பதற்காக அப்பகுதி முழுவதும் அகற் றப்பட்டு வெற்றிடமாக மாறியுள்ளது.

1963 ஆனி முதல் 1968 ஆடி வரை அருட்பணி அன்ரன் மிக்கேல் ஜோர்ச் இராசகாரியர் அடிகள் மண்டைதீவு- அல்லைப்பிட்டி மற்றும் சாட்டிப் பங்குத்தந்தை யாக பணியாற்றினார். அடிகளார் அவர்கள் புகைப் படமெடுப்பதைத் தனது பொழுது போக்காக கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இவ்வூரின் சிறார்களை அவ்விடத்திற்கு அழைத்துச்சென்ற போது ஆலயத்தின் மேல் வளைவொன்று உடைவுறாது இருந்ததாக கூறுகின்றனர். அவ்வாறு சென்ற சிறார்களுள் எனது தந்தையான பிலிப்பு அன்ரனி பெர்னான்டோ அவர்களும் உள்ளடங்குவார். அதன்படி தாம் ஆலயத்தின் வளைந்த வில் போன்ற முருகைக் கல்லாலமைந்த நுழைவு வாயிற்பகுதியைக் கண்டதாகச்

# இயேசுவின் உயிர்ப்பு நீதி அமைதியாக

## வெற்றி பெறும் என்ற உண்மை.

இன்று உயிர்ப்பு பொருவிழா. இயேசுவின் உயிர்தெழுதலை ஈஸ்டர் என உலக கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். உயிர்தெழதலை அன்றும், இன்றும் பல இறையியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நாமறிந்ததே. இயேசுவின் உடல் கல்லறையில் வைக்கப்பட்டு காவல் செய்தது உயிர்த்தெழுதலை தடுப்பதற்கு. ஆனால் கல்லறை காலியாக இயேசு உயிர் பெற்றார். கத்தோலிக்கர்கள் கொண்டாடுகின்ற திரு விழாக்களிலெல்லாம் தலைசிறந்த விழா இயேசுவின் இந்த உயிர்ப்புப் பெருவிழா. ஏனெனில் அது கத்தோலிக்க விசுவாசத்தின் பொருவிழா. கத்தோலிக்க வாழ்வுக்கு அடித்தளமாக இருந்து அர்த்தம் தருவது இயேசுவின் உயிர்ப்பே. இயேசு உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் என்று புனித பவுல் பைபிளில் குறிப்பிடுகின்றார். சாவின் சக்திகள் இறைவன் முன் பலமற்றவை என்ற செய்தியைப் பறைசாற்றிக் கொண்டேயிருக்கிறது.

சித்திரவதை செய்து கொல்லப்பட்ட மனிதன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார் என்று கூறுவது மடமைத்தனம். எவன் நம்புவான்? என்ன ஆதாரம்? எங்காவது இறந்தவன் உயிர்பெற்று எழுவதுண்டா? இயேசு உண்மையாகவே உயித்து விட்டாரா? இயேசுவைப் பற்றி முழுமையாய் அறிந்திராதவர்கள் மனத்தில் நுனிப்புல் மேய்ந்த பசுப்போன்ற எழும் கேள்வி இதுதான்.

ஹார்வர்ட் பல்கலைக் கழகச்சட்டப் பேராசிரியரும் இங்கிலாந்து நாட்டின் நோட்டிங் ஹாம் என்கிற இடத்திலுள்ள தூயயோவான் கல்லூரி முதல்வருமான கலாநிதி மைக்கல் கிரீன் லீப் உலக புகழ்மிக்க "சட்ட சாட்சியர் தொகுதி" என்னும் நூலாசிரியர் ஆவர். இவர் இயேசு உயிர்த்ததற்கான சாட்சியம் பற்றிய ஆய்வில் ஈடுபடுகையில் மேற்குறிப்பிட்டவாறு இயேசுவின் உயிர்ப்பு வெறும் கட்டுக்கதை என்று கருதினார். ஆனால் பைபிளை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து, தோய்ந்து, ஆழ்ந்து சிந்தித்தின் பைபிளில் மறுக்க முடியாத ஆதாரமுள்ள உயிருள்ள சாட்சிகள் உண்டு என்று கண்டறிந்தார். உயிர்ப்பு குறித்த ஐயத்திலிருந்து உண்மை அவரை விடுதலை செய்தது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் அவரைப் போலவே மறுத்துவந்து பின் உண்மை ஆதாரங்களை அறிந்து உணர்ந்து மனம் மாறினர் - கலாநிதி மைக்கல் கிரீன் எழுதினார்: "இயேசு உயிர்க்கவில்லை என்றால் அவருடன் வாழ்ந்த சீடர்கள் ஓர் உண்மையை உறுதிப்படுத்தியிருக்க முடியாது. ஏனென்றால் அந்த உண்மையை உலகறியச் சாட்சியம் கூறியதற்காக அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள் மறுத்துக் கூறுமாறு சிறையில் அடைக்கப்பட்டார்கள் உண்மைக்குச் சான்று பகர உயிரையும் கொடுத்தார்கள்" - உயிர்ப்புக்கு உயிருள்ள சாட்சிகள் அவர்களே என்கிறார்.

"இயேசு ஒரு போலி மெசியா. தந்தை யாவேயைப் பழித்துப் பேசியவர். அவரது பெயரால் உருவான கிறிஸ்தவத்தை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும்." என்று முழு மூச்சுடன் செயலபட்டவர் சவுல். உரோமர்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவம் பரப்புவோர் யார்? என்ற ஆவண விவரங்களுடன் அவர்களைச் சிறைப்பிடித்துக் கொல்ல வேண்டும் என்று தமஸ்கு நோக்கிப் பயணம் செய்த சவுல் உயிர்த்த இயேசுவினால் தடுத்தாளப்பட்டார். கி.பி. 67 இல். அவர் வாழ்வே உயிர்த்த இயேசுவுக்கு ஆதாரமான சாட்சியம் என்று எழுதி கலாநிதி மைக்கல் கிரீன் ஓர் ஆய்வு நூலை வெளியிட்டார்.

ஒரு முறை இங்கிலாந்து நாட்டுத் தலைமை நீதி அரசராக இருந்த மேமிகு லார்ட் டார்லிங் கூறுகிறார்: "ஏற்கனவே காணக்கிடைத்துள்ள அளவுக்கு அதிகமான சாட்சியங்கள் பலபல. உடன்பாடான சாட்சியங்கள், சூழ்நிலைச் சாட்சியங்கள், உண்மைச் சாட்சியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் உலகின் அறிவாற்றல்மிக்க எந்த நீதியரசரும் இயேசு உயிர்த்த செய்தி மெய்யே என்று தீர்ப்பு வழங்கத் தவறமாட்டார்". ஆக்சு போர்டு பல்கலை கழகத்தின் வரலாற்றுத் துறைத்தலைவர் பேராசிரியர் தாமஸ் ஆர்னால்டு "உரோமானியர் வரலாறு" என்னும் ஆராய்ச்சி நூலை ஆக்கியவர். வரலாற்று விழிகளையே மூடிவிட்டால்தான் இயேசு உயிர்ப்பை மறுக்க முயல முடியும் என்று எழுதினார். "வரலாறு குறித்த நோக்குகளும் இயேசு உயிர்த்ததற்கான சான்றுகளும்" என்னும் ஆய்வு நூலை வரலாற்று ஆதாரங்களுடன் வெளியிட்டார். பைபிளை முழுமையாக வாசித்த எவராலும் இயேசுவின் உயிர்ப்பு ஒரு கட்டுக்கதை என்று கற்பிதம் செய்யவே முடியாது என்றார். இயேசு உயிர்த்தெழுந்த உண்மைக்கு 500க்கு மேற்பட்ட சாட்சியங்கள் உயிருள்ளோர். மகதலா மரியா முதற்சாட்சி. கதவைப் பூட்டி உள்ளே அஞ்சி நடுங்கிய சீடர்கள் 11 பேர், எட்டு நாள் பின்னர் தோமா உள்ளிட்ட சீடர்கள், பின்பு திபேரியக் கடல் அருகே பேதுரு, திதிம்தோமா, கான நத்தனியேல், செபதேயு மக்கள், மீண்டும் எம்மாவுஸ் சீடர் இருவர். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். கடைசியில் எனக்கும் தோன்றினார் என்கிறார் பவுல் அடியார். இன்று நாம் சாட்சிகளா?

ம.பிரான்சிஸ்க் -

ஈஸ்டர் சிறப்பிதழ்

# குருத்துவத்தில் பொன்விழாக் காணும் மூத்த குரு அருட்பணி மங்களராஜா அடிகளாரோடு ஒரு சில நிமிடங்கள்

செவ்வி கண்டவர் : அருட்பணி எயின்சிலி றொஷான்

நேர்காணல்



**1. தந்தையே, உங்கள் 50 ஆண்டுகாலக் குருத்துவ வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்க்கும் போது, இறை அழைப்பை ஏற்க உங்களை முதலில் உந்தியது யாது? அந்த ஆரம்ப அழைப்பு உங்கள் வாழ்நாளெல்லாம் எப்படி உங்களை வழிநடத்தியது?**

1960ம் ஆண்டு நான் கரவெட்டிப் பங்கில் வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் பீடப்பணியாளர் கூட்டத்தில் இணைந்தேன். அப்போது எனக்கு 8 வயது அந்தக் காலத்தில் எம் பங்கைச் சேர்ந்த பி.நீக்கிலஸ் அ.ம.தி. அடிகளார் தனது குருத்துவ திருநிலைப்படுத்தலின் பொன்விழாவைக் கொண்டாடினார். அப்போதே அந்த பொன்விழா நிகழ்வு என் மனதில் பதிந்துவிட்டது. அப்பொழுது அழைத்தல் விதை என்னில் ஊன்றப் பட்டதை நான் உணரவில்லை. பின்னர் என் தந்தையின் பணிமாற்றம் காரணமாக நாங்கள் அனுராதபுரம் பழைய நகரில் குடியேறினோம். அங்கே பங்குத்தந்தையூடாக எனது இளைய சகோதரர் குருவாகும் ஆசையைத் தெரிவிக்க அவருக்கு ஆயரைச் சந்திக்க ஓர் வாய்ப்புக் கிட்டியது. அவருடன் நானும் ஆயரைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் சென்றேன். அங்கு நின்ற என்னைப் பற்றி ஆயர் அவர்கள் விசாரித்து என்னிடமும் குருவாக வர ஆசை உள்ளதா என வினவினார். நான் சம்மதம் தெரிவித்த போது என்னையும் அவர் குருமடத்தில் இணைத்துக் கொண்டார். அப்பொழுது அனுராதபுரமும் யாழ் மறை மாவட்டத்தின் ஓர் பகுதியாகவே இருந்தது.

**2. நீங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாகக் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றியுள்ளீர்கள். அந்த கல்விசார் பணியுடன் உங்கள் குருத்துவப் பணி எவ்வாறு இணைந்தது? குருத்துவ கல்லூரி வாழ்க்கையில் உங்கள் விசுவாசத்தை எவ்வாறு பகிர்ந்தீர்கள்?**

நான் எனது பணிவாழ்வில் முதல் 10 ஆண்டுகள் உதவி மற்றும் பங்குத்தந்தையாக முல்லைத்தீவு, தாழையடி, பண்டிவிரிச் சான் போன்ற பங்குகளிலும் பின்னர் மன்னார் மறைமாவட்டத்தில் சில பங்குகளிலும் பணியாற்றினேன். பின்னர் எனக்கு மேற்படிப்புக்குச் செல்வதற்கான ஆசை ஒன்று உருவாகியது. ஆயர் தியோகுப்பிள்ளையின் அனுமதியுடன் திருஅவையின் வரலாறு பற்றிக் கற்க உரோமாபுரிக்குச் சென்றேன்.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் தாய்நாடு வந்து குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். பின்னர் கலாநிதிப் பட்டத்திற்காக மீண்டும் வெளிநாடு சென்று என் உயர்கற்நைநெறியை மேற்கொண்டேன். தொடர்ந்து மீண்டும் நாடு திரும்பி இடப் பெயர்வுக் காலங்களில் மன்னார் மடுவில் இருந்த தற்காலிக குருமடத்தில் எனது பணியைத் தொடங்கினேன்.

நான் விரிவுரையாளராகவும், உருவாக்குநராகவும் இருந்தாலும் வார இறுதி நாட்களில் அயல் பங்குகளுக்குச் சென்று எனது மேய்ப்புப்பணியைத் தொடர்ந்தேன். நான் குருமடத்தின் அதிபராக இருந்த சந்தர்ப்பத்திலே ஆயர் அவர்களால் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்த மண்டைதீவுக் கிராமத்தை எனக்குப் பொறுப்பாக ஒப்படைத்தார். இவ்வாறாக என்னுடைய 50 வருடப் பணி வாழ்வில் 30 வருடங்கள் குருமடத்திலேயே பணியாற்றி இருந்தாலும், இந்தக் காலங்களில் என்னால் இயன்ற பணிகளையும் உதவிகளையும் நான் பங்குகளுக்கும் பங்கு மக்களுக்கும் வழங்கியிருக்கின்றேன்.

**3. யாழ்ப்பாண மறைமாவட்டம் கடந்த போர்க் காலங்களில் பல சவால்களையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டது. அந்தக் காலங்களில் நீங்கள் உங்கள் குருத்துவ வாழ்க்கையை எவ்வாறு அனுபவித்தீர்கள்? மக்களின் துயரில் எவ்வாறு பங்கேற்றீர்கள்?**

போர்க்காலங்களில் மிக முக்கியமாக நான் மன்னாரிலே பணியாற்றியபோது தான் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் கொல்லப்பட்டார். நான் அப்போது பல சவால்களை எதிர்கொண்டேன். பங்கு மக்கள் எனக்குப் பெரிதும் துணையாக இருந்து செயற்பட்டார்கள். இராணுவத்தினர் இரவு நேரங்களில் சோதனை நடத்துவதாக அறிந்து பங்குமக்கள் அரிப்பிலும், சிலாவத்துறையிலும் என்னைத் தங்க விடாது தமது வீடுகளில் வைத்துப் பாதுகாப்பு அளித்தார்கள். குருக்களுக்கு மட்டுமன்றிப் பொது மக்களும் அளவுகணக்கின்றிக் கொன்று குவிக்கப்பட்ட கொடூர காலம் அது. நான் பல சந்தர்ப்பங்களில் துப்பாக்கிமுனைகளின் முன் நிறுத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டேன். போர்க் காலங்களில் மக்களுடன் மக்களாக இருந்து பணியாற்றிய அனுபவம் மறக்க முடியாது.

**4. உங்கள் குருத்துவ வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியளித்த தருணங்கள் என்ன? அதேபோல் கஷ்டமான நேரங்களில் உங்களைத் தாங்கிய வல்லமை என்ன?**

என்னுடைய குருத்துவ வாழ்வில் எனது பெற்றோர், ஞானப் பெற்றோர், சகோதரர்கள் சிறப்பாக என்னுடைய பெரியம்மா (அருட்சகோதரி) எனக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருந்து செயற்பட்டனர். அவர்கள் மட்டுமன்றி என் பங்கு மக்களும் எப்பொழுதும் எனக்குப் பக்கபலமாக இருந்தார்கள். அதனால் பல்வேறு ஆபத்துக்கள் மத்தியிலும் நான் பணியாற்றக்கூடிய சூழல் ஒன்று காணப்படடது. அது எனக்கு மன நிறைவை அளித்தது. அதுமட்டுமன்றி நான் மன்னாரில் பணியாற்றியபோது அடிக்கடி மடுப்பதிக்குச் சென்று அன்னையின் பரிந்துரையைக் கேட்கும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறாக என்னுடைய பணிக்காலங்கள் உற்சாகமும், மனநிறைவும் அளிப்பனவாகவே இன்றும் விளங்குகின்றது.

**5. இன்றைய காலத்தில் திருஅவையும் இறைவிசுவாசிகளும், குறிப்பாக இளைஞர்களும் எதிர்கொள்ளும் பாரிய சவால்கள் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அதற்குக் குருக்கள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?**

இன்றைய கட்டத்தில் இளைஞர்கள் பல சாவல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக போதைவஸ்துப் பாவனையானது பலரின் வாழ்வை சீர்குலைத்து வருகின்றது. திருஅவை பல வழிகளை மேற்கொண்டு பலரைக் காப்பாற்றினாலும் இன்னும் பெரும் தொகையினர் அதற்கு அடிமையாகியே இருக்கின்றனர். ஆகவே குருக்கள் போதைப் பாவனையுள்ள இளைஞர்களை இனம் கண்டு, அவர்கள் மட்டில் அக்கறைகாட்டிக் கூடிய சேவைகளை மேற்கொண்டு அவர்களையும் செயற்பாடுமிக்க பொது நிலைக் கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டும். ஏனெனில் இளைஞர் பணியானது திருஅவையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகும்.

**6. உங்களின் குருத்துவப் பொன் விழாவின் போது இளைஞர்களுக்கும், யாழ்ப்பாண மறைமாவட்ட இறை விசுவாசிகளுக்கும் நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

இளைஞர்களை ஆலய செயற்பாடுகளிலும், ஆரோக்கியமான பொழுது போக்கிலும், அறிவுசார் அதாவது கல்விச் செயற்பாடுகளிலும் ஆர்வமாக ஈடுபட வைக்கக்கூடிய செயற்பாடுகளைத் திருஅவை மேற்கொள்ள வேண்டும். வெறுமனே புத்தக அறிவில் மாத்திரம் தங்கியிருக்க விடாமல் இளைஞர்களை உலக நடப்புகளுடன் இணைந்து செயற்படக்கூடிய செயற்பாடுகளையும் திருஅவையின் ஆண்டுச் செயற்திட்டங்களில் உள்ளடக்கி அவர்களை என்றும் செயற்பாடுள்ள கிறிஸ்தவர்களாக வைத்திருக்கவேண்டும்.

**7. உங்கள் 50 ஆண்டுகாலப் பணி வாழ்வில், யாழ்ப்பாணக் குருக்கள் குழாமின் தோழமையை நீங்கள் நிறைவாகப் பெற்றுள்ளீர்கள் அவர்களுடன் உங்கள் அனுபவம் என்ன? கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை வலுப்படுத்த நீங்கள் அவர்களுக்குச் சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

பலகாலங்களாக யாழ் மறை மாவட்டக் குருக்களிடையே காணப்படுகின்ற தோழமை உணர்வானது ஏனைய மறைமாவட்டங்களுக்கும் முன்னுதாரணமாய் அமைந்ததை நான் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக அருட்தந்தை செல்வராசா போன்றோர் தோழமை உணர்வைக் கட்டியெழுப்புவதில் பல முயற்சிகளை எடுத்துள்ளனர். மேலும் குருக்கள் தனிமையிலே செயற்படுவதை நான் குருத்துவத்தின் ஆபத்தாகவே பார்க்கின்றேன். குருக்கள் தனிமையை விரும்பி, மற்றவர்களுடன் பழக விருப்பமில்லாமல் இருக்கின்றார்கள் என்றால் அப்படி யானவர்களை சக குருக்கள் இனம் கண்டு அவர்களின் பிரச்சினையை அறிய வேண்டும். குழுச்செயற்பாடு, ஒற்றுமை போன்ற தோழமைப் பண்புகள் குருமடப் பயிற்சிக் காலங்களிலேயே மாணவர்களுக்கு அளிக்கப்பவேண்டும்.

**8. வரலாற்றாசிரியராகவும் கத்தோலிக்க வார இதழ் (பாதுகாவலன்) எழுத்தாளராகவும் நீண்ட பல காலம் பணியாற்றியுள்ளீர்கள். விசுவாசிகளுக்காக எழுத உங்களைத் தூண்டியது என்ன? அந்த எழுத்துப் பணியை உங்கள் குருத்துவப் பணியின் ஒரு பகுதியாக நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

கடவுள் எங்களுக்குத் தந்த ஆற்றல்கள், திறமைகள் அனைத்தும் எங்களின் சுயநலனுக்கன்றி, அதை மற்றவர்களின் நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் நாம் பயன்படுத்த வேண்டும். அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி. எனவேதான் நான் என்னுடைய எழுத்துத்திறமையையும், நல்ல ஆக்கங்களைப் படைக்கும் ஆர்வத்தையும் எனது குருமட ஆரம்பகாலம் தொட்டே விருத்தி செய்து வருகின்றேன். இப்படியாகப் பல குருக்கள் பல நூல்களை எழுதுவதிலும், ஆக்கங்களைப் படைப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். அவர்களின் திறமைகள் பாராட்டப்பட்டு மென் மேலும் வளர்ச்சி யடைவது திரு அவைக்குப் பாரிய பங்களிப்பை எதிர்காலத்தில் தரும்.

**9. உங்கள் ஜூபிலியை முன்னிட்டு, நீங்கள் முன்பு எழுதிய கட்டுரைகளை ஒரு நூலாக வெளியிட இருக்கிறீர்கள். உங்கள் எழுத்துகள் விசுவாசிகளுக்கு எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? இன்றைய கத்தோலிக்க வார இதழ் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?**

மக்கள் புத்தகங்களைவிட, வார இதழ்கள், நாளிதழ்களில் காட்டும் ஆர்வம் அதிகம். ஆகவே எங்களுடைய ஆக்கங்களை அதற்கேற்ப நாம் படைக்கவேண்டும். மேலும் அவர்களின் வாசிப்புத்திறனை மென் மேலும் ஊக்கப்படுத்தி வளர்ச்சியுறச் செய்யவேண்டும். எனக்கு நல்ல ஞாபகம் இருக்கின்றது சிறிய குருமடத்திலே சிறுகாலமாக நாங்கள் பாதுகாவலன் பத்திரிகையை மாத்திரம் தான் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே நாங்கள் அதிபர்தந்தையுடன் போராடினோம் என்றுதான் சொல்லவேண்டும். வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளைப் பெற்றோம். அத்துடன் நான் சிறுவனாக இருந்த காலத்தில் தனிநாயகம் அடிகளாரின் உலகத் தமிழ் பேரவை மாநாட்டுக் கட்டுரைகள், சிந்தாமணி போன்ற நூல்களையெல்லாம் வாசித்திருக்கின்றேன். வாசிக்கின்ற ஆர்வமானது வெறுமனே தாய்மொழியில் மாத்திரமன்றி ஏனைய மொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் ஏற்பட்டால் எமது இளைஞர்கள் திசைமாறி திரியாது வாழ்வை செம்மைப்படுத்த உதவியாக அமையும்.

**10. யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குநராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளீர்கள். குரலற்றோரின் குரலாகத் தமிழ் மக்களுக்கு நீங்கள் புரிந்த பணி சவால் மிக்கதே. அக்காலத்தில் உங்கள் மன உணர்வு எப்படி இருந்தது?**

அது மிகவும் ஆறுதல் தருகின்ற ஒரு பணியாகவே அமைந்தது. சில வேளைகளில் இராணுவத்தினரினதும், புலனாய்வுத்துறையினரின் குறுக்கீடுகள் இருந்தாலும் எனது பணியை நான் நேர்மையுடன் மேற்கொண்டு இருக்கின்றேன். குறிப்பாக இந்த காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்குகளில் சாட்சியம் கூற வருவோரை நீதிமன்றத்திற்குச் சென்று உற்சாகப் படுத்தியிருக்கின்றோம். மேலும் மாவீரர்தினங்களின் போது அச்சுறுத்தல்கள் இருந்தாலும் அதில் பங்கேற்றது மனதுக்கு ஆறுதல் அளித்துள்ளது. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான வழக்குகளில் எந்தவித பதிலும் கிடைக்காததுதம் அதற்காக வடக்கு - கிழக்கு ஆயர்களும் குருக்களும் போராடுகின்றபோது தென்பகுதியில் இருந்து எந்தவித ஒத்துழைப்பும் எமக்கு கிடைக்காதது அதிருப்தியையே அளிக்கின்றது.

# திருநிலைப்படுத்தப்படும் புதிய குருக்கள்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்களும், கிளறேசியன்சபையைச் சேர்ந்த இரு திருத்தொண்டர்களும் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 18ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.
புதிய குருக்களை பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## திருத்தொண்டர் றெ.ஜோ.ஜோண் கில்ரன்



பண்டத்தரிப்புப் பங்கின் புனித செபமாலை அன்னை ஆலயத்திரு அவையைச் சேர்ந்த திரு .திருமதி றெனாட் ஜோண்சன் விக்டோரியா குமுதினி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்ப இடை நிலைக் கல்வியை யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலையிலும் மற்றும் உயர்கல்வியை யா/ புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும் ஆரம்ப மெய்யியல், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார்.

## திருத்தொண்டர் யோ.பி.யோண் எமில்ரன்



பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத் திரு அவையைச் சேர்ந்த திரு. திருமதி யோண் பிலிப் றதிவேர்மினா தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்திலும்,உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், ஆரம்ப மெய்யியல் கற்கை நெறியை களுத்துறை புனித திருஇருதய ஆண்டவர் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் மற்றும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

## திருத்தொண்டர் ஸ்.ஸ்ரீபன்றாஜ்



வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு. திருமதி. ஸ்ரனிஸ்லாஸ் மரியநாயகி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக் ல்வியை வெற்றிலைக்கேணி, றோ.க.த. பாடசாலையிலும், உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், ஆரம்ப மெய்யியல் கற்கை நெறியை களுத்துறை புனித திருஇருதய ஆண்டவர் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் மற்றும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

## திருத்தொண்டர் யேசுதாஸ் கிரிசாந் CMF



பாஷையூர் பங்கின் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. யேசுதாஸ் மேரி மில்றேற் தம்பதிகளின் மகனாவார். தனது ஆரம்பக் கல்வியினை குழுமுனை அரச தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை யாழ். கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியினை நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியிலும், மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியினை கண்டி அம்பிட்டிய, இலங்கை மாதா தேசிய குருமடத்திலும் கற்றார். தனது நவசந்நியாச பயிற்சியை நிறைவு செய்து, 2019.09.08 அன்று கிளரீசிய துறவற சபையில் முதல் துறவற அர்ப்பணத்தை மேற்கொண்டு, 2025.09.08 அன்று தமது நித்திய துறவற அர்ப்பணத்தையும் மேற்கொண்டார்.

## திருத்தொண்டர் பவுலீஸ் சுகந்தன் CMF



நாவந்துறை புனித பரலோக அன்னை பங்கை சேர்ந்த திரு திருமதி பவுலீஸ் சகாயராணி தம்பதிகளின் மகனாகிய இவர் பாடசாலை கல்வியினை கிளி/நாச்சிகுடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும்,

மெய்யியல் கல்வியினை மதுரை புனித அருளானந்தர் கல்லூரியிலும், இறையியல் கல்வியினை கண்டி அம்பிட்டிய, இலங்கை மாதா தேசிய குருமடத்திலும் கற்றார். தனது நவசந்நியாசப் பயிற்சியை நிறைவு செய்து, 2019.09.08 அன்று கிளரீசிய துறவற சபையில் முதல் துறவற அர்ப்பணத்தை மேற்கொண்டு, 2025.09.08 அன்று தமது நித்திய துறவற அர்ப்பணத்தையும் மேற்கொண்டார்.

# திருப்பாலத்துவசபை சின்னம் சூட்டும் நிகழ்வு



இளவாலை சென். ஜேம்ஸ் ஆலயத் திருஅவையைச்சேர்ந்த 84 மாணவ மாணவிகளுக்கு திருப்பாலத்துவ சபை நிரந்தர சின்னம் வழங்கும் திருச்சடங்கு அன்மையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ஏ.சில்வெஸ்ர்தாஸ் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற திருப்பலியை யாழ் மறைமாவட்ட திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் இயக்குநர் அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

இளையோரினதும் இணையத்தளத்தினதும் பாதுகாவலாகிய புனித கார்லோ அக்குடிஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறும், சமூகத்தொடர்பாடல் ஆண்டில் சிறியோர் எவ்வாறு பொறுப்புடன் சமூக வலைத்தளங்களையும், தொடர்புசாதனங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதை தனது மறையுரையில் அருட்தந்தையால் சிறார்களுக்கு புரியவைக்கப்பட்டது. மாலையில் சிறார்களின் கலைநிகழ்வுகளும், மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் நடைபெற்றன. நீண்டகால இடைவெளியின் பின்னரே இத்திருச்சடங்கானது இவ்வாலயத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தமிழ் விழா




யாழ். புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் தமிழ் விழா கடந்த பங்குனி மாதம் 23ம் திகதி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருட்கலாநிதி இ. பெற்றுஸ் தயாபரன் அவர்களின் வழிப்படுதலில், மன்றக் காப்பாளர் அருட்திரு தி. குயின்சன் பெனாண்டோ அவர்களின் நெறிப்படுத்தலில், மன்றத் தலைவர் அருட்சகோதரன் யோ. சுனில் குமார பீரிஸ் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகரும் (நாடகமும் அரங்கியலும்), யாழ். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநருமான திரு. ஜோசப் ஜோண்சன் ராஜ்குமார் கலந்துகொண்டார். இவ்விழாவில் குருமட மாணவர்களினால் நடனம், பாடல், கூத்து போன்ற கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. சிறப்பு நிகழ்வாக அதிதூதர் புனித மிக்கேலின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் "விண்ணக வீரன்" என்னும் வட மோடிக் கூத்தும் இடம்பெற்றது. இக்கூத்தானது அண்ணாவியார் திரு. அரியநாயகம் அன்று யூலியஸ் அவர்களால் நெறியாக்கம் செய்யப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்ததுடன், அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்றன.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
28
07
1949



இறப்பு
30
04
2024

அமரர்
**அந்தோனிப்பிள்ளை பீற்றர் (குமார்)**

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்'

**ஆண்டுகள் இரண்டு ஆகிடினும்
ஆறிடுமோ எம் நெஞ்சங்கள்
வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க
வரலாறாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்**

இவரின் ஆன்மா நித்தியமும் இறைவனில் இளைப்பாற 2026.04.24ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு, புனித கார்மேல் மாதா ஆலயத்திலும், 2026.04.26 திகதி வியாழக்கிழமை காலை 05.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும், இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் மாறா நினைவுகளில், அன்பு மனைவி,ஆசைமகள், அன்புச்சகோதர் குடும்பங்கள்.

'தாயகம்'
42/5, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

AD - 127

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23
06
1942



ஆண்டவன் அடியில்
12
04
2025

அமரர்
**சந்தியோ அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் (வவா)**

(முன்னாள் உதவிமுகாமையாளர்– சுதந்திர வர்த்தக வலயம், கொழும்பு
உரிமையாளர் – றாஜ்லொஜ், றாஜ் தொலைத்தொடர்பு நிலையம், சுண்டிக்குளி)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே."
(2 திமோத்தேயு 4: 7-8)

அன்பின் திருவுருவமே பாசத்தின் உறைவிடமே
ஒளியாய் நின்று எம்மை உயர்த்தி விட்டவரே
எம்குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து காட்டியவரே
இறையடி சேர்ந்து ஓராண்டு ஆனாலும்
எம் மனம் உம்மைத்தேடியே பதறி அழுகின்றது! அப்பா!
இறைசந்நிதியில் வீற்றிருப்பதால் மனம் ஆறுதல் அடைகின்றது.

எம் குடும்பத்தலைவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 2026.04.11 ம் திகதி சனிக்கிழமை காலை 05.45 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

31, கதிற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்

AD-131

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14
06
1942



இறப்பு
26
03
2019

அமரர்
**மரியா மின்னொளி ஜூலியன் (லூர்த்துமலர்)**

அன்பான எம் உறவே அடியவர் மனங்களில்
நிறைந்து அண்டியவர் எல்லோருக்கும்
அன்பின் ஆலோசகராய் வாழ்ந்தீர்
என்றும் உங்களை நினைக்கின்றோம்
எல்லாம் வல்ல இறைவனின் நிழலில்
எக்காலமும் இன்பமாய் வாழ
எங்களிற்காய் இறைவனிடம் வேண்டுங்கள்.

219, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9752
077 749 8865

இவரின் பிரிவால் துயருறும், கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் , உறவினர், நண்பர்கள்

AD-130


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு சித்திரை மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.